Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 9.—April 1902.

CONTENTS.

| | | PAGE. |
|---|---|---|
| Agricultural Banks | Editors | 321 |
| Râmâyana Sâram | C. Muthiah Mudaliar | 323 |
| Vikramorvasîyam | P. M. Srinivasa Chariar | 328 |
| Silappadhikaram : A Study | P. A. Prantartiharasiva, B.A., L.T. | 333 |
| Famine | M. Varadaraja Aiyar | 336 |
| Learning | V. S. Chengalvaraya Pillai | 342 |
| Was Rama justified in killing Vali? | S. K. Sundara Charlu | 351 |
| CORRESPONDENCE | | 354 |
| REVIEWS OF BOOKS | | 355 |
| EDITORIAL NOTES | | 358 |

*Madras:*

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1902.

# JNANA BODHINI

## Terms of Subscription.

**Annual Subscription including postage Rs.... 2 8 0**

N.B.—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

**The Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதார்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சேமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடகவியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழிபெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| இரண்டாம் பாகம் ... | 0 | 8 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை ஆரியன் புக் டெபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும், அகப்படும்.

# ஞானபோதினி.

---

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

---

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1902ஹு ஏப்ரல்மீ 20உ {புத்தகம் 9.

விஷயங்கள்-


| | | பக்கம். |
|---|---|---|
| கிருஷிநிதிகள்.—பத்திராதிபர் | ... | 321 |
| இராமாயணசாரம்.—செய்யூர் - முத்தையமுதலியார் | ... | 323 |
| விக்கிரமோர்வசீயம்.—பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர் | ... | 328 |
| சிலப்பதிகார வாராய்ச்சி.—பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனர், பி. ஏ., எல். டி., | ... | 333 |
| பஞ்சம்.—ம. வரதராஜ ஐயர் | ... | 336 |
| கல்வி.—வ. சு. செங்கல்வராய பிள்ளை | ... | 342 |
| ஸ்ரீராமர் வாலியைக்கொன்றது நீதியாமா?—சருக்கை-கி. சுந்தராசாரியர் | ... | 351 |
| கடிதம்.— | | |
| புத்தகக்குறிப்புக்கள்.— | | |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | | |


பத்திராதிபர் :— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை :
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

வருஷசந்தா ரு. 2—8—0 சஞ்சிகை ரு. 0—4—0

# ஞானபோதினி

சம்புடம் V. } 1902ஆம் ஏப்ரல்மீ 20உ. { புத்தகம் 9.

## AGRICULTURAL BANKS.
## கிருஷி நிதிகள்.

நம் இந்தியாவின்கண்ணே அடிக்கடி பஞ்சங்கள் தோன்றி நம்மவர்களைப் பலவழிகளினுந் துன்புறுத்தாநின்றன வென்பது உண்மையே. நமது துரைத்தனத்தாரும் இதனை ஓராற்றானறிந்து பஞ்ச நிவர்த்திக்கேற்ற முயற்சிகள் செய்யத்தலைப்பட்டனர்; எனினும் அவை அத்துணை பயன்பட்டில. ஒரு காலத்தில் எல்ஜின் பிரபு இராஜப் பிரதிநிதியா யிருந்துழிக் கொடிய பஞ்சமொன்று இந்தியாவிற் புகுந்து பல்லாயிர வுயிர்களை வதைத்து நாட்டினை அலங்கோலப் படுத்திப் பாழாக்கிற்று; அது கேட்ட துரைத்தனத்தார் இந்தியாவிற்கு ஏதேனும் பணவுதவி செய்யவேண்டுமென்று ஆலோசித்தனர். அவ்வமயத்து, மிக்க புகழ்சான்ற மார்லி யென்னும் நிபுணர் இந்தியாவில் நேர்ந்த பஞ்சத்தைப் பற்றி நன்காராய்ந்து தமது அபிப்பிராயங்களை வெளியிட்டனர். அஃதுணர்ந்த பொக்கிஷ மந்திரியாரும் பணவுதவி செய்யலாமென்றிணங்கினர். அஃது அந்தோ! நம்மவர் துரதிர்ஷ்டத்தினால் நின்றுபட்டது. இனிக் கர்ஸன் பிரபு இராஜப் பிரதிநிதியாய் வந்த பின்றைத் துரைத்தனத்தார் இதன்கட் பெருங்கவலை காட்டினர். எனினும் பஞ்சங்கள் தோன்றுவதைக் குறித்தும் அங்ஙனந் தோன்றுவதன் காரணங்களைக் குறித்தும் நம்மவர்கட்குந் துரைத்தனத்தார்க்கும் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. ஆயினுஞ் சீமையிற் பாராளுமன்றிலும் இந்திய விஷயங்கள் அடிக்கடி கவனிக்கப்படுவனவாயின; இன்னும் நமக்கு அனுகூலமாகப் பல காரணங்கள் தோன்றியிருக்கின்றன. ஆதலின், நம் இந்தியாவின்கணுள்ள ஏழைப் பயிர்த்தொழிலாளிகளது நன்மையுங் கவனிக்கப்படுமென்ப தொருதலை.

முற்காலங்களில் நம் இந்தியா சகல சுகங்களையும் அடைந்து பொன்னுலகம்போற் பொலிந்திருக்கையிற் பயிர்த்தொழிலாளிகள் தத்தம் வீடுகளிலேயே தானியக் களஞ்சியங்கள் வைத்திருந்தனர்; தங்கள் பெண்டு பிள்ளைகட்கு அணிகலன்களிட்டிருந்தனர்; பக்கத்திலே கேட்கினும் அவர்கட்குக் கடன் கிடைத்தது. மற்று இப்போதோ உழவர் நிலைமை முழுதும் மாறிப்போய்விட்டது: தானியக் களஞ்சிய முடையராயிருந்த வுழவர் தரித்திரக்களஞ்சியங்க ளாயினர்; இந்திரன்கலையா யவர் மருங்கிருத்தலின் அவர்தம் பெண்டு பிள்ளைகளை யணிவித்த லெங்ஙனமியலும்? இக்காலத்திற் பயிர்த்தொழிலாளிகளுக்கு ஒரு காசுங் கடன் கிடைப்பதில்லை. ஆதிகாலங்களிற் பஞ்சங்கள் தோன்றியக்காற் பயிரிடுவோன் தனது தானியக் களஞ்சியத்தினின்றுந் தானிய மெடுத்துண்பான்; அது பேதாதாயின் வீட்டு அணிகளை விற்றுப்பிழைப்பான்; அதன்மேலும் பஞ்சந்தணியாது சில்லாண்டு நீடித்திருந்துழிப் பக்கத்திலே கடன் வாங்கித் தன்னைப் பாதுகாத்துக்கொள்வான். இப்போது ஓராண்டு மட்டிலே பஞ்சம் இலகுவாய்த் தலை காட்டினும் உழவன் கண் கலங்கி உணவு முடையுமின்றி, ஏர்க்காலையுந் தாறுகோலையும் இறப்பிற் செருகிவிட்டு வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான். இத்தகைய வுழவனைப் பாதுகாப்பது யாவர்க்கு மெய்தியதோர் கடப்பாடாம். பயிரிடுவோர்க்குப் பணக்கடன் கொடுத்து அபரிமிதமான வட்டி வாங்கி அவர்களை யேழைகளாக்கி முழுதும் விழுங்கிவிட முயலும் சாவகாரிகளது வாயினின்றும் அவர்களைத் தப்புவித்துக் காத்தல் வேண்டும். இதனை யுணர்ந்தே நம் துரைத்தனத்தார் உழவர்கட்கு உதவி செய்ய முயலாநின்றனர்.

வறுமைக் கிருப்பிடமான வுழவன் கடன் வாங்கி அதிக வட்டி கொடுத்து மூழ்கிப்போகா வண்ணம், அவனுக்குப் பயிர்த்தொழிற் காலங்களிற் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து உதவி செய்யுமாறு சில சிறந்த கிராமங்கடோறும் கிருஷிநிதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அங்ஙனம் அவை யேற்படாவிடிற் பயிரிடுவோர் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாகும். இம்மதி முதற்றெய்தி யன்று வெளிப்பட்ட சென்னை மாகாண வரவு செலவு கணக்குத் திட்டத்தின் கட் கிருஷி நிதிகள் தாபிக்கும் விடயமாய்த் துரைத்தனத்தார்

சிறிதுபணம் அளியாநிற்பரென்ப துணர்ந்து களிகூர்கின்றும். கனம் பொருந்திய நிக்கல்ஸன் துரையவர்கள் கிருஷி விஷயங்களில் மிக்க அநுபவ முடையவராதலின் அன்னாரது யோசனையின்படி நடத்தப்படுங் கிருஷிவிஷயங்கள் செவ்வையாய் நடைபெறு மென்றும் நமது இராஜதானி யுழவர்கள் சிறிது காலத்திலேயே யுதவி பெறுவார்களென்றும் யாம் நம்புகின்றனம்.

இன்னும் இந்தியாவினது மற்றை மாகாணங்களினுங் கிருஷிநிதிகளைத் தாபிக்குமாறு துரைத்தனத்தார் முயன்று வருகின்றனர். மேலுங் கிருஷிநிதிகள் இப்படித் தாபிக்கப்படல் வேண்டு மென்பதையும் இன்னின்ன விதிகட்கு அடங்கியவைகளா யிருத்தல் வேண்டு மென்பதையும் இன்னின்னவாறு நடத்தப்படல் வேண்டு மென்பதையும் பற்றித் துரைத்தனத்தார் செய்துள ஏற்பாடுகளனைத்தும் யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியனவே. இங்ஙனந் துரைத்தனத்தாரது விருப்பமும் ஜனங்களது அவசியமு மொன்றுதலான் நம் இந்தியாவின்க ணுள்ள சிறந்த கிராமங்கடோறுங் கிருஷிநிதிகள் ஏற்பட்டுப் பயிர்த்தொழிலாளிகளை உய்விக்கு மென்பது திண்ணம்.

இஃதன்றி, ஒவ்வொரு கிராமத்தினுமுள்ள தலைவர்கள் சிலர் ஒருங்கு கூடித் தமக்குட் பணந்திரட்டி, அதை ஒரு மூலதனமாக வைத்துக்கொண்டு ஏழை யுழவர்கட்குக் குறைந்த வட்டிக்குப் பணங் கொடுத்து உதவியக்கால் அஃதே சிறப்புடைத்தாகும். அப்படிச் செய்தலியலாது போயின், அவ்வமயத்துத் துரைத்தனத்தார் ஏற்படுத்திய உழவர்க்கெய்ப்பினில் வைப்புச்சாலையிற் பணம்பெறுதல் நேரிதாம்.

பத்திராதிபர்.

---

## RAMAYANA SARAM.

## இராமாயண ஸாரம்.

[292 - ஆம் பக்கத் தொடர்ச்சி.]

ஸ்ரீராமசந்திரன் எந்த நாட்டிற் பிறந்து எவ்வாறு வளர்ந்துவந்தானென்பதைப்பற்றி யிங்குச் சற்றே ஆராய்வோம்.

அலைகடலென்னும் ஆடையாற் சூழப்பட்ட நிலமகள்தனக்கு முகமென மிளிர்வது கோசலநாடாம். அந்த முகத்துக்குத் திலகமென ஒளிவீசுவது

அந்நாட்டின்கணுள்ள அயோத்திமாநகரம். இந்நகரத்தின் சிறப்பை இவ் வளவென்று அளவிட்டுக் கூறுதல் இயலாது; இதைக் காண்பாரனைவரும், பிரமன் முதலிய தேவருலகிற்கெல்லாம் மேற்பட்ட உலகம் இதுவோ என்று மயங்குவார்கள். இந்நகரம் சரயு வென்னும் வற்றா நதியின் ஜலம் பாயப்பெற்றது; ஆகையால், நீர்வள நிலவள முதலியவற்றில் எக்காலத் தும் குறையாது செழிப்புடன் விளங்குவது; இதிலுள்ள மாடமாளிகை கூடகோபுரங்களின் அலங்காரத்தைப் பார்க்கப்பார்க்கப் பரமானந்த முண் டாகும். இந்நகரத்தின் இடையிடையே செல்லும் அகன்று நீண்ட அரசர்வீதி, அந்தணர் வீதி, கடைவீதி, கணிகையர் வீதி, வைதிகர் வீதி, வைசியர் வீதி, முதலிய பற்பல வீதிகளும், ஆங்காங்குத் தோன்றும் மாட வீடுகள், மணிப் பந்தல்கள் முதலியவற்றின் விநோதக் காட்சியும், சுவர்க்க லோகத்தையும் இழிவு படுத்தத் தக்க பேரழகுவாய்ந்தன, பூஞ்சோலை, மாஞ்சோலை, கமு கஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலிய விதவிதமான சோலைகளும், அரச மண்டபம், ஆஸ்தான மண்டபம், ஆடல் மண்டபம், பாடல் மண்டபம், பாவலர் மண்டபம், பொதுஜன மண்டபம் முதலிய பற்பல சித்திர விசித் திர மண்டபங்களும் நகரத்தின் நாலுபக்கங்களிலும் காணப்பட்டன. இவ் விதச் சிறப்புக்களை யெல்லாம் நாம் ஆராய்ந்து பார்ப்பதனால், அக்காலத்தில் அயோத்திமாநகரம் எவ்வளவு உயர்ந்த நாகரிகத்தில் இருந்த தென்பது நமக்கு இப்போது மிகவுந் தெளிவாய்ப் புலனாகின்றது. இந்தப் பட்டணத் துக்கு அக்காலத்திற் சத்துரு பயமென்பதே கிடையாது. யுத்தத்தில் இதனை வெல்லத்தக்கவர் ஒருவரும் இல்லாமையினால்தான் இதற்கு அயோத்தி யென்று காரணப்பெயர் கொடுக்கப்பட்டது. இத்துணைச் சிறப்பும் பெற்று விளங்குமாறு அந்நகரைச் செங்கோலோச்சி யாண்டு வந்தவன் இக்ஷ்வாகு வம்சத்தைச் சார்ந்த வோர் மன்னன். இவ்வரசன் ரத கஜ துரக பதாதியென் னும் நால்வகைப் படைகளையும் மிகுதியாகப்படைத்தவன்; இவனிட மிருந்த வீரர்கள் யாவரும் யுத்த முறைமையை நன்றாய்க் கற்றவர்கள்; தரும யுத் தமே செய்பவர்கள்; அதரும யுத்தத்தைக் கனவிலுங் கருதாதவர்கள்; புலிமுதலிய துஷ்டமிருகங்களையும் ஒரு நொடியிற் கொன்று வெற்றிபெறு வார்கள்; ஆனால் யுத்தகளத்தில் வலிகுறைந்து நிராயுதபாணியாய் நின்று விட்டால், அவர்களுக்கு ஒரு துன்பமுஞ் செய்யமாட்டார்கள். அடிமைகளை யும் பயந்து ஒளிப்பவர்களையும், அபயமென்று தம்மைச் சரணமடைந்தோர் களையும் ஒருபொழுதுங் கைவிடார்கள்; அவர்களைக் காத்து இரக்ஷிப்பதே தமக்குற்ற கடமையாய்க் கொண்டொழுகுவார்கள்.

[தரும யுத்தத்தி னியல்பு நந்தமிழ்ப் புறப்பொருளிலக்கணங்களிற் கூற ப்படுந் தழிஞ்சி யென்னுந் துறையின் பாற்படும். தழிஞ்சியாவது ஒரு வீரன் தனக்குக் கெட்டோடுவார் முதுகு புறத்துக் க‹ரிய வாளோச்சாத மிக்க மறப்பண்பை விரும்பிச் சொல்லுவதாம்.

"வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா
னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா
ஞறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்"

என்றார் சிந்தாமணியினும்.]

இவர்கள் யாவரும் விதிப்படி நேரியவழியில் நடந்து வருகின்றார்களா வென்பதையும், தன்னாட்டி லுள்ள சாதுக்களுக்கு யாதொரு தீங்கும் அணுகாமலிருக்கின்றதா வென்பதையும்பற்றி அரசன் அல்லும் பகலுங் கவனித்து வருபவனாயிருந்தான். அவன் நாட்டில் வாழ்ந்த அந்தண ரனைவரும் செந்தண்மை பூண்டவர்களாய், ஜெபதபங்களைக் காலக்கிரமப்படி செய்பவர்களாய், வேதாகமங்களைப் பயபக்தியுடன் ஓதுபவர்களாய், சத்தியத்தைக் கடைப்பிடித்தவர்களாய், யாவரும்வணங்கத்தக்கமுனிவர்குழாமொத்துவிளங்கினர். * இவ்வரசன் கீழிருந்த குடிகளும் கல்விச்செல்வத்திலும் பொருட்செல்வத்திலுங் குறைவற்றவர்களா யிருந்தனர். அன்றியும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் 'போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து'. இத்தக்கொள்கையைப் பெற்றால், அவர்களுக்குக் குறைவு முண்டோ ?

† "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று"

என்னும் ஆன்றோர் வாக்கின் ஆழ்ந்த கருத்திற்கிணங்க, அவர்களில் ஒவ்வொருவரும் தமக்குத் தாழ்ந்த நிலைமையிலுள்ளாரைக்கண்டு தாமே செல்வத்திற் சிறந்தவர்களென்று அகமகிழ்பவர்களாயும், தம்மினுங் கற்றவர்களைப் பார்த்துத் தாம் "கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவு" என்று கருத்தடங்கிமேன்மேலுங் கற்கவிரும்புபவர்களாயுமிருந்தனர். அயோத்திமாநகர்முழுவதிலும் வறுமைப்பிணியால் வருந்தியவர்களையேனும், கல்வியின் மணமறியாத நிரக்ஷர குக்ஷியையேனும் காணுதல் அருமையாயிருந்தது. இத்துணைச்சிறப்பு வாய்ந்த இந்தியாவானது இப்போ தடைந்திருக்கும் இழிநிலைமையை யென்னென் றெடுத்துரைப்பது ! இக்காலத்திற் கற்றார் சிலராயுங் கல்லாதார் பலராயுமிருக்கின்றனர். அன்றியும், இப்போதுள்ளவர்களில் அநேகர் "ஆசைக்கோரளவில்லை யகில மெல்லாங் கட்டியாளினும்" என்னுந்தாயுமானர் வாக்குக்குத்தாமே இலக்கென முன்வருகின்றனர். இன்னோர்பால் திருப்தியென்பது மருந்துக்குங் கிடைத்தலரிது. செல்வத்தைக் குறைவாகப் பெற்றவர்களில் எத்தனையோ பெயர், தமக்குக் கிடைத்த அந்த

* வான்மீக ராமாயணம் §V † நீதிநெறிவிளக்கம்.

அளவுக்கு மட்டில் திருப்திப்பட்டு அமைதியாய்க் காலங் கழிக்கின்றனர். இவரிப்படி யிருப்பச் செல்வத்தைமிகுதியாகப்பெற்ற கோடீசுவரரிற் பெரும் பான்மையோர், தாம் கொண்ட அளப்பருஞ் செல்வத்துடனும் அமைதி யுறாது, தம்மினும் மிக்காரைநோக்கித்தாமும் அவ்வாறு பெற்றிலமேயென்று வாழ்நாள் முழுவதும் வருந்தி வாடா நிற்பர். அந்தோ! என்னே இவர்தம் அறிவீனம்!! திருப்தியென்பது அவரவருடைய மன நிலையைப் பொருந்து வதேயன்றி அன்னார் எய்தும் பதவியையேனும் செல்வத்தையேனும் பொரு ந்துவதாமோ? திருப்திக்கும் அதிருப்திக்கும் காரணமாயுள்ளது அவரவர் மனத்தின் நிலைமையே யாகும். ஆகையால், மனநிறைவே திருப்தியாமென் பதை யொருவரும் மறத்தல் கூடாது.

இவ்வரசன் செங்கோலுக் குட்பட்டிருந்த ஆடவரும் மகளிரும் அகமும் புறமும் ஒத்தவர்கள்; நற்குண நற்செய்கையர்; ஆகவே, இவர்கள் யாவ ரும் பேரழகுவாய்ந்து பொலிவுடன் விளங்கினார்கள். எனெனில், நாகரி கத்தை நன்குணர்ந்து, தூயசிந்தையராய், நன்னெறியி லொழுகுவார்க்குத் தேகத்தில் வனப்பும் பொலிவும் உடன்தோன்றுவது இயல்பேயாம்.

தசரதமகாராஜன் தனக்கு மந்திரிகளை ஆராய்ந்து கொள்ளும் விஷயத் திற் காட்டிய புத்தி சாதுர்யம் பல ஜனங்களாலும் பாராட்டத் தகுந்ததா யிருந்தது. இவ்வரசனால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள்,

* "தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கு மெய்யர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார்."

கல்வியில் வல்ல கலைவலாளர்; அரசன் நன்மையை நாடிச் சமயம் வந்துழி யெல்லாம் அவனுக்கு இடித்திடித்துப் புத்திபுகட்டும் பேரறிவாளர்; இரா ஜ்ய தந்திரங்களை நன்குணர்ந்த நிபுணர்; அவைக்களங்களில் அஞ்சாது பேசும் ஆற்ற லுடையவர்; கேட்பார்க் கின்பம் பயக்க நன்மொழி பகரும் நாவலர்; தம்முயிரைக் கைவிடினுஞ் சத்தியத்தைக் கைவிடாத உத்தம சீலர்; இத்தகைய மந்திரிகளையும் அயோத்திமாநாட்டையும் ஆளப் பெற்றுக் குறையற்றவனாய் வாழ்ந்தான் தசரதமகாராஜன் †

ஆனால், குறையற்ற வாழ்க்கையராய் நிலைத்திருத்தல் மண்ணுலகில் வாழும் மாந்தர்க்கு அரியதன்றே! ஆகவே, குறையற்றிருந்த நம்தசரதரு க்கும் ஒரு பெருங்குறை நிகழ்ந்தது. சகல பாக்கியங்களும் பெற்றார் தசர தர்; ஆனால், புத்திரபாக்கியம் மட்டிற் பெற்றாரல்லர். என் செய்வார்? புத்திரபாக்கியம் எளியதோர் பேறன்றே!

* கம்பராமாயணம். † வான்மீக ராமாயணம் § VI.

* "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற."

பெறுதற்கரிய மேலான பாக்கியங்களுள் மேலான தெனக் கருதப்படுவதன்றோ புத்திர பாக்கியம்?

† "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

† "சொன்ன கலையின் றுறை யனைத்துந் தோய்ந்தாலு
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி."

ஆயிர மாயிரமாகப் பல்வேறு யாகங்களை இயற்றிய போதிலும், மக்களைப் பெறுமாந்தர் வானுலகத்தை எந்நாளேனும் எய்துவரோ? புத்திரர்களைப் பெறுப்பாவியர் புத்என்னும்நரகவாயின் இடைப்பட்டு இடர்ப்படுவாரன்றே? குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேளா மாந்தரன்றோ குழலோசை இனிதென்றும் யாழோசை இனிதென்றும் வாய் கூசாது கூறுவர்? மாந்தர்க்குத் தேவாமிர்த மொத்துப் பேரானந்தம் விளைக்குஞ் செவியமுதமன்றோ மக்களின் மழலைச்சொல்? அந்த மழலைச் சொல்லைக் கேளாத செவியும் ஒரு செவியோ? அக்குழந்தைகளுடன் அளவளாவி அவர்களுக்கு நல்முத்தந்தாராத வாயும் ஒருவாயோ? அவர்களை வாரி யெடுத்து மார்புறத் தழுவி உடலின்பம் பெறாத உடலும் ஒருடலோ? அக்குழந்தைகள் தவழ்ந்து விளையாடப்பெறாத இல்வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையோ? அஃது இல்வாழ்க்கையேயன்றோ? அன்றியும், புஷ்பங்கள் அலராத பூஞ்சோலைக்கு ஏதேனுஞ் சிறப்புண்டோ? தாமரை யிருந்தும் பூவாத் தடாகத்துக்கு ஏதேனும் பொலிவுண்டோ? சந்திரன் பிரகாசியாத ஆகாயத்துக்கு ஏதேனும் அழகுண்டோ? இவைபோல மக்களைப் பெறாத மாந்தரின் மனைக்கு ஏதேனும் மதிப்புண்டோ?

‡ "தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
புக்கிளந் தாமரை நகாத பொய்கையு
மிக்கிளம் பிறைவிசும் பிலாத வந்தியு
மக்களை யிலாததோர் மனையு மொக்குமே."

* திருக்குறள். † நளவெண்பா. ‡ சூளாமணி. வான்மீக ராமாயணம். § VIII.

* "கண்ணில் யாக்கையுந் திங்களில் கங்குலுங் கண்போ
லண்ணன் மந்திரி யில்லர சாட்சியு மருளி
திண்ணெ னெஞ்சமும் புலவரி லவையுமொண் டீம்பால்
வண்ண வாயிள மக்களில் வாழ்வுமொப் பாமால்."

இவற்றை யெல்லாங் கருதினார் தசரதர்; தொன்று தொட்டு வந்த இரவிகுலம் பழுது படும்படி புத்திரப்பேறில்லாப் பாவியானோமே யென்று உள்ளங் கலங்கினார்; உடல் மெலிந்தார்; ஆற்றொணாத் துயரக்கடலில் அழுந்தினார். அவரோ, அப்போது முதுமைப்பருவ மடைந்திருந்தனர். ஆகையால் நகரத்து ஜனங்களும் தசரதருக்குப் பின் தலைவனற்ற தம்மை யாவரே காப்பாரென்று அலமந்து நின்றனர். பின்பு, தசரதர் எண்ணாது மெண்ணித் தம்மனத்துள் ஒன்றுந்தோற்றாது, வசிஷ்டரின் மலரடிகளை வணங்கித் தம் குறையை அவருக்கு விண்ணப்பித்தனர். அம்முனிபுங்கவர் ஞானதிருஷ்டியா னாராய்ந்து பார்த்து அசுவமேத யாகம் புரியின் அரசனுக்கு மகப்பேறு உண்டாகுமென்று கூறினார்.

(இன்னும் வரும்.)

சேய்யூர் - முத்தைய முதலியார்.

## VIKRAMORVASI'YAM.

## விக்கிரமோர்வசீயம்.

இனியதோற்றத்தவள்பெருங்காதலை யென்றுநீபுகல்கின்றாய்புரூரவன்
நனியவண்ணிமித்தத்துறுபீழையை நன்குகண்டிலையாலிருவர்க்குமே
தனியிலாதுசாதாரணமாயவிவ் வாசைதானுடன்கூட்டிடும்வேட்கனன்
மணியவெம்பொருள்வெம்பொருடன்னொடே மன்னவைத்ததற்குப்போல
[மன்மாதரோ. (36)

**சித்திரலேகை:**—(உருப்பசியை யடைந்து) தோழி! உன்னிடத்திலுங் காட்டில், மன்மதன் மிகவுந் தயையற்றவனாயிருக்கக்கண்டு, இனிய நண்பனுக்குத் தூதியாக வந்தவளாகின்றேன்.

**உருப்பசி:**—(திரச்கரிணியை நீக்கி) அடி! சித்திரலேகே! நின்னால் விடப்பட்டவளாகின்றேன்.

**சித்திரலேகை:**—இனி அறிவேன் எவள் எவனை விட்டிடப் போகிறாளென்று; இப்பொழுது இச்சமயத்துக்குத் தக்கவியவகாரத்தை யறிவாயாக.

**உருப்பசி:**—(நாணத்தோடு) செயம் பெறுக மகாராசர். (என வணங்குகின்றாள்.)

**அரசன்:**—சுந்தரி!

* சீகாளத்திப் புராணம்.

இந்திரனை யன்றிமற்றோ னேவனையுஞ்சேராத
இந்தச் சயவசன மீங்கெதனா னீபுகன்றாய்
எற்கே சயமதனா லே. (35)

(கைகளைப் பிடித்து இவனை இருக்கச்செய்கிறான்.)

**விதூடகன்:**—அரசனுக்கு இனியநண்பனாகிய அந்தணன் ஏன் வணங்கப்படு கின்றிலன்?

(உருப்பசி சிரிப்போடு வணங்குகின்றாள்)

**விதூடகன்:**—மங்கள முனக்கு.

(திரைக்குள்) **தேவதூதன்:**—சித்திரலேகை! விரைவி, விரைவி உருப்பசியை.

எண்சுவை தெரிச்கு மெய்ப்பிர பந்தம்
பண்புற நுமக்குப் பரதமா முனிவன்
ஓதுவித்தனனே வுபரிசி சயத்திறம்
மோதநற் பயிற்சி மூண்டுள வதனை
வண்ணநல் லமுதம் வசையறப் பருகி
விண்ணுலா மமரர் வியக்குந் தலைவன்
உலக பாலர்தம் முடனே
கலந்திது போழ்து காணுநெஞ் சினனே. (36)

(எல்லோருங் கேட்கின்றனர். உருப்பசி நெஞ்சயர்ச்சியை அபிநயிக்கின்றாள்)

**சித்திரலேகை.**—கேட்கப்பட்டதா இன்றோழியால் தேவதூத வசனம்? அனுமதி கொடுக்கட்டும் மகாராசர்.

**உருப்பசி.**—(பெருமூச்செறிந்து) இல்லை எனக்கு வாய்; மகாராச! இந்தச்சனம் பரவசமானது; மகாராசாவினால் விடைதரப் பெற்றவளாக இச்சிக் கின்றேன், தேவர்களில் அபராதஞ் செய்தவளல்லளாக என்னைச் செய்து கொள்ளற்கு.

**அரசன்:**—(மிகவருந்தி மனத்தை நிலைப்படுத்திக்கொண்டு) உங்களுக்கு இறைவன்கட்டளை யைத் தடுப்பவனாகின்றிலேன்; நினைக்கத்தக்கது இச்சனம்.

(உருப்பசி, பிரிவின்றயரைத் தோற்றுவித்துக் கொண்டு சகியோடு சென்றனள்.)

**அரசன்:**—(பெருமூச்சோடு) தோழ! இப்போழ்து நாட்டத்திற்கு அவமே.

**விதூடகன்:**—(பத்திரத்தைக் காட்டவிரும்பி) அரச! (என்றஅரைப்பேச்சில் தன்னுள்) ஆ! சீ ஆ! சீ! உருப்பசியின் பார்வையினால் அற்புத மடைந்துள்ள நான், கையினின்றும் நழுவிய புயமரப்பட்டையை அநவதானத்தால் அறிந்தி லேன்.

**அரசன்:**—தோழ! என்ன சொல்ல விருப்பினவனா யிருக்கிறாய்?

**விதூடகன்:**—இவ்வாறு சொல்ல விருப்பினவனா யிருக்கின்றேன்; நீ கண்ணீர் விடேல்; உருப்பசி நின்னிடத்தில் திடமாகப் பற்றிய மனமுடையவ

என்றோ ? அவள் இச்சனத்தை யடைந்துள்ள அநுராகத்தைச் சிதைப்பாளல்லளென்று.

**அரசன்:**—என்னது நெஞ்சமும் இதனை ஊகிக்கின்றது;

செல்லுங்கா றன்னுடற்குச் சேரிறைமை பூண்டிருத்தல்
இல்லா வவளா லினைநகிலின்—கம்பவினை
காட்டுயிர்ப்பி னாலேயென் கண்ணவசங் கொண்ணெஞ்சம்
வேட்டுவைக்கப் பட்டதுபோன் மே. (37)

**விதூடகன்:**—(தன்னுள்) நடுங்குகின்ற தென்மனம் ; அங்கவன் நண்பனாற் புயமரப்பட்டையின் பெயர் எடுக்கத் தக்கதாகு மென்று.

**அரசன்:**—மனச்சுழற்சி கொண்ட என்னை எதனால் இப்போழ்து ஆசையுறுவிப்பேன். (சிந்தித்து) ஆ ! புயமரப்பட்டையைக் கொணு.

**விதூடகன்:**—(துக்கத்தைத்தோற்றுவித்து) காணப்படவில்லையே! உருப்பசியின் வழியாற் சென்றது.

**அரசன்:**—எங்கும் கண்விழிப்பற்றவன் கைம்பெண்மகன் ; அடே ! தேடுவாய் நீ.

**விதூடகன்:**—இங்கே இங்கே இருக்கும்.

(தேடுதலை அபிநயிக்கின்றான்)

(பின்பு புகுகின்றனன் காசிராசன் மகள் பரிவாரத்தோடு)

**தேவி.**—அடி ! நிபுணிகை ! நீ சொன்ன துண்மையா? "ஆன்றோன்மாணவகனோடு இக்கொடிவீட்டிற் புகும் பெரியோர்மகர் பார்க்கப்பட்டார்" என்று.

**நிபுணிகை:**—தலைவி, என்னால் முன்னம் வேறுவகையாக விண்ணப்பிக்கப் பட்டிருக்கின்றனளா ?

**தேவி:**—'அதனால், இவர் ஏகாந்தத்துத் தம் மனம்போனபடி பேசும் பேச்சுக்களை, 'நீ சொன்னது உண்மையா ? அன்று ?' என்று, கொடிக்குள் மறைந்தவளாய்க் கேட்பேன் காண்.

**நிபுணிகை:**—தலைவிக்கு எவ்வாறு தோன்றுகின்றதோ.

**தேவி:**—(உலாவி) நிபுணிகை ! இஃதென்? பழைய மரவுரிபோலத் தென்றலினால் இம்முகமாய்க் கொண்டு வரப்படுகின்றது.

**நிபுணிகை.**—(ஆராய்ந்து) தலைவி ! புரள்வதினால் ஊகிக்கப்பட்ட எழுத்துக்களமைந்துள்ள புயமரப்பட்டையன்றோ இது ; அந்தோ ! தலைவியின் சிலம்புநுனியிற் சிக்கியது. (எடுத்து) உன்னால் எவ்வாறு வாசிக்கப்படும் ?

தேவி:—இதை நீயே முழுவதும் வாசிகாண்; மாறின்றி யிருக்குமாயின் பின்பு கேட்பேன்.

நிபுணிகை:—(அவ்வாறு செய்து) அதே அபவாதம் போல் தோன்றுகின்றது; தலைவரைக் குறித்து உருப்பசியாற் செய்யப்பட்ட செய்யுள் எனவும், ஆன்றோன் மாணவகனது அநவதானத்தினால் நம்முடைய கைக்கெட்டியதெனவும் ஊகிக்கின்றேன்.

தேவி:—ஆனால், இதன் பொருளை யுணர்ந்தவளாகின்றேன்.

(நிபுணிகை அரசனால் முன்னர்ப் படிக்கப்பட்ட அதனையே படிக்கின்றனள்.)

இந்தக் காணிக்கைப் பொருள்கொண்டு அச்சரப்பெண்பாற் காதலுடையோனைக் காண்பேன்.

நிபுணிகை:—அவ்வாறே.

(கொடிவீட்டைக்குறித்துச் செல்கின்றனர்.)

விதூடகன்:—ஓ! தோழ! காற்றின் வயப்பட்டுச் சென்று செய்குன்றினுச்சியிற் காணப்படுகின்றது.

அரசன்:—(எழுந்திருந்து) பகவனே! இளவேனிலினினிய நண்பனே! மன்மதன் சுற்றத்தோனே! தென்றிசை வாயுவே!

மணங்கொள்வா னிளவேனி ரூனி றைத்து
வைத்தகொடி மலர்ப்பொடியை வாரிக் கொள்வாய்
கணங்குழையென் னுயகிதன் காதல் காட்டக்
கையெழுது மெழுத்தினைவீண் கவர்ந்தென், கண்டாய்
திணமறிகின் றூயெதனு லிவ்வ கைத்தாங்
தெருளிலுளங் களிப்புறற்குச் சேரு பாயம்
நணப்பிழைத்த விழைவுலைந்த சனத்தை யஞ்ச
னுதேவி பாற்றெரித்த வேண்ட லோய்நீ. (38)

நிபுணிகை:—தலைவி! அதே புயமரப்பட்டையின் தேடுகை நடக்கின்றது.

தேவி:—காண்கின்றேன்.

விதூடகன்:—ஓ! தோழ! வாடிய வகுளத்தினொளிபெற்ற மயிற்றோகையினால் வஞ்சிக்கப்பட்டவனாகின்றேன்.

அரசன்:—எவ்வாற்றானும் கேடுற்றேனாகின்றேன்.

தேவி:—(அருகணைந்து) சாலும்! சாலும்! பரபரப்பு; இது புயமரப்பட்டை.

அரசன்:—(விரைவோடு தன்னுள்) அயே! இவள் தேவி. (விளக்கம்) தேவிக்கு நல்வரவா?

தேவி:—இப்பொழுதெனக்குத் தீவரவு உண்டாயிற்று.

அரசன்:—(மறைவில்) தோழ! இங்கென்ன பரிகாரஞ் செய்யத்தக்கது?

விதூடகன்:—கையும் பொருளுமாய்க் கண்டு பிடிக்கப்பெற்ற கள்ளனுக்கு மறுமொழியுண்டா?

அரசன்;—தேவி! இது தேடப்படுகின்றிலது; இம்முயற்சி மற்றொன்றைத் தேடற் பொருட்டதன்றோ!

தேவி:—தகும் தனது காதலை மறைத்தற்கு.

விதூடகன்:—தேவி! இவரது பித்தத்தை நீக்குதற்கேற்ற உண்டியை விரைவி.

தேவி:—நிபுணிகை! அந்தணனால், தோழன் அழகாக அறிவூட்டப் பட்டனனன்றோ!

விதூடகன்:—ஆன்றோய்! இதைக்கண்டு ஆவேசித்தபேய் விடுகின்றிலது.

அரசன்:—மூர்க்க! நீ என்னைத் தவறிழைத்தவனாக வலிய மொழிகின்றனை.

தேவி:—உன்மீது குற்றமில்லை; எந்தயான், உன்னுடைய பிரதிகூலத்தை நோக்கினவளாய் உன் முன் நிற்கின்றேனே? அந்தயானே இங்குக் குற்றமுடையவள். நிபுணிகை! இங்கே

(என்று கோபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு புறப்படுகின்றாள்.)

அரசன்:—(தொடர்ந்து)

சேர்பிழையி னேன்டானே சீற்ற மகன்றிடுவாய்
ஆர்கருணை செய்வா யரம்பையினை—நேர்துடையாய்
மன்வணங்கத் தக்கசன மற்றழன்றக் காலடியன்
என்வகையாற் பிழையில னே. (39)

(என்று கால்களில் வீழ்கின்றான்.)

தேவி:—(தன்னுள்) எளியமனமே! நானோ வேண்டுகோளை நன்குமதிக்கின்றிலேன். ஆனால், தாரட்சிணியத்தாலுண்டாகும் உன்னுடைய பச்சாத்தாபத்திற்குப் பயப்படுகின்றேன்.

(என்று அரசனை விட்டுப் பரிவாரத்தோடு அகன்றனள்)

விதூடகன்:—ஓ! தோழ! கார்ப்பருவத்தாறு போல் தெளிவற்றவளாய்த் தேவி சென்றனள். எழுந்திரு காண்!

அரசன்:—(எழுந்து) தோழ! இது தக்கதன்று; பார்

இன்னுரை கள்பல கோடியி யைந்துள தென்றாலும்
துன்னிய காந்தச னங்களின் வேண்டுகை தோகையருள்
கொன்னனு ராசமி கந்தறு கற்பித வன்னங்கொள்
மன்னிய தோர்மணி யாய்குநர் நெஞ்சென வாயாதே. (40)

இவைகளினாலுண்டாகும் பஞ்சத்தை நிலங்களைச் சீர்படுத்துவதனாலும், தகுந்த வரப்புகள் எழுப்புவதனாலும், கழிவு நீர் கழிதற்கு வழிவிடுதலானும், கிராமங்களில் தகுந்தபடி சலத்தாரை கட்டுவித்தலானும் வரவொட்டாமல் ஒருவாறு தடுக்கலாம். பூகம்பமும் பஞ்சத்திற்கு ஒரு காரணமாம். எவ்வாறெனில், களங்களினருகே நிலம் பிளவுபடுமேல், அருகிலிருக்கும் வாய்க்காலின் தண்ணீர் பிளப்பின் வழிச்சென்று களத்தைக் கெடுத்துவிடும். சிலசமயங்களிற் களமே பிளப்பில் தூர்ந்துவிடும். பூச்சி, புழு, வெட்டுக்கிளி, எலி, முதலியவைகள் அறுப்புக்காலங்களில், கதிர் முற்றிய சமயத்தில், அவைகளைக் கத்தரித்தெறிந்தால் தானிய நாசமாகிப் பஞ்சம் விளைகின்றது. 1812-13-ஆம் வருடங்களிற் சென்னை ராசதானியில் உண்டாகிய பஞ்சம், "எலிகள் விளைத்த தீங்கினால்" உண்டாயிற்றென்று தீர்மானிக்கப்படுகிறது.

இதுகாறும் பஞ்சத்தின் இயற்கைக் காரணங்களாவன எவையென விசாரித்தோம். இனி அதன் செயற்கைக் காரணங்களிற் சிலவற்றைப் பற்றி விசாரிப்போம்:—யுத்தமே பஞ்சத்திற்கு முதற்பெருங் காரணம். போரே நாட்டிற்கு நண்ணியதோர் நமன். இஃதே நம் பொருளனைத்தையும் விழுங்கும் மலைப்பாம்பு.' இது முடிந்த நான்கல்லது ஐந்து வருடங்கட்கு நாட்டைப் பஞ்சம் பீடியாமல் விடாது. ஏனெனில், அநேக சமயங்களில் விவசாயக்காரர்கள் கூடக் கத்தி பிடித்துச் சண்டையிடும்படி நேரிடுகின்றது. ஆகவே, விவசாயத்தைக் கவனிப்பாரின்றி அது க்ஷீணத்தை யடைந்து கடைசியிற் பஞ்சத்தில் வந்து முடிகின்றது. இன்னும் போர்க் காலங்களிற் பகைவர் நாட்டிற் பிரவேசித்துத் தங்களெதிர்ப்பட்ட நிலங்களையெல்லாம் நாசப்படுத்தியும், கையில் அகப்படும் பொருள்களையும் தானியங்களையும் சூறையாடி விட்டும் ஓடிவிடுகிறார்கள். இவர்கள் போகும்பொழுதே பஞ்சமென்னும் விதையிட்டுப் போயினரோ வென்று சொல்லும்படி யுடனே பஞ்சமுண்டாகின்றது.

2. அறைகுறை விவசாயத்தின லிப்பஞ்சம் சம்பவிக்கலாம். ஒரு நாட்டில் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தின் ஒரு வருஷச் செலவிற்குத் தக்கபடி மாத்திரம் பயிரிட்டு மற்றைப் பாகங்களைத் தரிசாகவிட்டு விட்டால், எதாயினு மோர்வருடத்தில் விளைச்சல் சாவியாகப்போய் விட்டாலும் அல்லது திரளான சனங்கள் அயலூரிலிருந்து குடிபுகுந்து விட்டாலும் பஞ்சமுண்டாகுமென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயமே. சைதாப்பேட்டையில் விவசாயஞ் செய்யு முறைமையைக் கற்பிக்குங் கலாசாலை யொன்றிருந்தும் நம்மிந்திய மிராசுதாரர்கள் ஆங்குச்சென்று யாவற்றையும் தெரிந்து கொள்ளாதது மிகவும் வியக்கத் தக்கதேயாம்.

3. வாணிபக் குறைவும் பஞ்சத்திற் கிடனே. இவ்விதம் நேர்தற்குக் காரணம் வழிகள் கெடுதலாயிருப்பதனாலும், வழிகளே யின்மையினாலும்,

நீர்ப்பாய்ச்சலுக்கு அவசியமான கால்வாய்களின் தேவையினாலுமே. ஒரு தேசத்தின் ஒரு பகுதியிற் பஞ்சம் மிகக்கொடுமையாக விருப்ப, மற்றொரு பகுதியில் ஜனங்கள் செவ்வனே ஜீவித்திருந்ததாகப் படித்திருக்கிறோம். இக்காலங்களிற் கால்வாய்கள் அதிவிரைவில் தோண்டப்படுவதனாலும், புகை வண்டிப் பாதை நாடெங்கும் ஊடுருவிச் செல்லுதலானும் இவ்வித இடையூறுகள் அநேகமாய் நீக்கப்பட்டுள்ளன.

(4) தானியங்களைச் சரியான வழியிற் செலவிடாது ஒருவன் தனக்குத் தோன்றியவா றெல்லாம் வழியல்வழிகளிற்செலவிட்டாற் பஞ்சமுண்டாகு மென்பதற்கும் தடையுண்டோ ? நங்கிராமங்களில் எத்தனை சனங்கள் திரளான தானியங்களைக் கருப்பனுக்கென்றும் சக்கிலியனுக்கென்றும், இருளனுக்கென்றும், வீரனுக்கென்றும், இன்னுமிவை போன்றவனேக தேவர்களுக்கென்றும் அக்கினியிலிடுகிறார்கள் ! அந்தோ ! ! இவையனைத்தையும் நல்வழியிற் செலவிட்டால் பஞ்சமுண்டாவதற் கிடனுமுண்டோ ? ஆங்கிலேய துரைத்தன வரசாட்சியாற் பஞ்சத்தின் செயற்கைக் காரணங்களெல்லாம் ஒருவாறு நீக்கப்பட்டுள்ளன. ஆகவே, நாம் அவர்கள் மாட்டு எந்நாளும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

நான்குவேத, ஆறுசாஸ்திர, அறுபத்தினன்கு கலைஞானங்களுக்கு முறைவிடமாகியதும், பரதகண்டமென்று சொல்லப்படுவதுமாகிய நம்மிந்தியாவிற் பஞ்சமுண்டாவதற்குக் காரணம் ஜன மிகுதியாலென்பது சிலர்தம் அபிப்பிராயம். ஆனல் அவர்கள் கொள்கை பெருந்தவறு. முன்பு நடந்த ஜனகணிதக் கணக்கின்படி இந்தியாவில் ஜனவிர்த்தி, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய விடங்களிற்போல விரைவாக அதிகரிக்கவில்லை யென்பது ஏற்படும். குடியானவர்களின் அஜாக்கிரதையினாலும், மிதமிஞ்சிச் செலவழித்தலானும் பஞ்சமுண்டாகின்ற தென்பது சிலர்தம் கொள்கை. அக்கொள்கையுந் தவறே. உலகத்திலுள்ள குடியானவர்களிலெல்லாம் நம்மிந்தியக் குடியானவர்கள்தாம் மிகவும் ஜாக்கிரதைக் காரர்களென்றும் வரவிற்கேற்றபடி செலவு செய்பவர்களென்றும், முன் யோசனைக்காரர்களென்றும், இவர்களைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் சாட்சிசொல்லுவார்கள்.

(5) இவைகள் யாவற்றிலும் பஞ்சத்தின் முக்கியகாரணம் நிலவரியே. நிலத்தின் விளைவிற்குமேல் வரி யேற்பட்டுவிட்டாற் பாடுபட்டவர்கள் எவ்வாறு பிழைப்பதோ? அறியோம். நம் நாட்டில் விளைவிற்பாதிப் பாகத்திற்குமேல் சர்க்கார்த் தீர்வைக்குப் போய்விடுகின்றது. மற்றைப்பாதியிற் குடியானவர்களுக்கு எங்கிருந்து கொடுப்பது ? ஏர் பிடித்துழுதவர்கள் என் செய்வது ? தன் ஜீவனம் எவ்வாறு நடப்பது ? இன்னும் நிலத்தின் வளப்பத்திற்காக வேண்டிய எரு முதலாயின எவ்வாறு இடுவது ? முற்காலத்தில் நம்மரசர் ஆண்டபோழ்து தீர்வை விளைச்சலில் ஆறி

லொரு பகுதியாக விருந்தது. அக்காலங்களில் மேற்கூறியவைகளுக்கெல்லாம் சரியாக விருந்தது. பஞ்சம் வருவது மிகவு மரிது. ஆனு லிக்காலத்திலோ பஞ்சமில்லாம விருப்பது மிகவு மரிதாயிருக்கின்றது. 1866-ஆம் வருஷத்தில் ஒரிசாவிலும், 1873-74-இல், பீஹாரிலும், 77 - 78-இற் சென்னை ராஜதானியிலும், 1890 முதல் தற்கால பரியந்தம் இந்தியா முழுமையிலும் பஞ்சமாக விருக்கிறது. தீர்வை மிகுதியாக விருப்பதனுலும், விளைச்சலிற் பெரும்பாகமும் நிலவரி முதலியவைகளுக்குப் போய்விடுகின்றமையினுலும் ஜனங்கள் தானியமிகுத்துத் தேவையான சமயங்களில் உபயோகிக்கக் கூடாமற் போய்விடுகின்றது. நம் நாட்டுக் கைத்தொழில், நெசவு முதலாயின சீமையின் யந்திரவேலைக்கு முன்னிற்க மாட்டாமற் பின்னடைந்துபோயின. எனவே தொழிலாளிகளுக்கும் வியவசாயக்காரர்கட்கும் தங்கள் நிலங்களைத்தவிர வேறு பிழைக்கும் வழி யில்லாமற் போய்விட்டது. தீர்வை மிகுதியானுல் இத்திரளான ஜனங்கள் எவ்வாறு பிழைப்பர் ?

பஞ்சமுண்டாவதற்கு அநேக உற்பாதங்கள் உள்ளன:— நம் நாட்டுக் கொள்கையின்படி வானத்தில் வால்நக்ஷத்திரம் என்ற ஒரு தோற்றம் காணப் படுமாகிற் பஞ்சம் சம்பவிக்கு மென்று சொல்லப்பட் டிருக்கிறது. இன்னும் காலையிற் கரியமேகங்கள் வானத்தி லொருங்கு கூடி இடிமுதலிய வாடம்பரங்களிற் சிறிதும் குறைவில்லாது, நண்பகலிற் கொடுமை கூட்டுங் கதிரவனையுங் கருதாது, அவனது கிரணங்களைத் தன்னுளடக்கி, வெளிக்கிளம்பு வாரது சிரசைக் கடுமழையாற் றுளைப்பதுபோலத் தோன்றிப், பகலுக் கிறைவோன் தன் குகைக்குச் செல்லுங்காறும் கடுங்கோபத்தினு லவனது கொடிய கிரணங்களைத் தடுக்கவேண்டு மென்ற வெண்ணங்கொண்டதுபோலத் தோன்றிப் பரவியிருந்து, அவன் மறைந்தவுடன் "இவ்வானத்திலா மேகங்கள் கூடிய!" வெனக் கண்டோர் வியக்க நீரைவிட் டலம்பினுற் போல, ஒரு துளியேனும் நிலத்திற் பெய்யாது கண்ணுக்கெட்டாத்தூரம் செல்லும். இவ்வாறு மழையில்லாவிட்டால் நீர்வளப்பமின்றி விளைச்சல் குன்றிவிடும். இது பற்றித்தான் "மாரியல்லது காரியமில்லை" என்று நந் தமிழ் முதாட்டி கூறினள்போலும். இன்னும், அந்தணர் முதலிய உயர் குலத்தவர் தங்கள் வேள்வி, நித்தியக்கடன், தேவபூசை, முதலானவைகளில் தங்கள் காலத்தைச் செலவிடாது வேறு அகிருத்தியமான விஷயங்களைச் செய்யத் துணிவரேற் பஞ்சம் உண்டாகு மென்ப.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்னுந் திருக்குறளை யிங்குணர்க. இதற்குத் திருஷ்டாந்தமாகப் பண்டிய நாட்டில் அரசாண்ட உக்கிரப்பெருவழுதி (உக்கிர குமாரபாண்டியன்) தன்தேயம் பஞ்சத்தாற் பீடிக்கப்படுதலின் காரணத்தை ஒரு முனிவ

பார்கேட்க, அப்பெரியோரும் "நின்றேயத்திலந்தணர் முதலிய உயர்குலத்தார் தங்கள் குலாசாரத்தையும், வேதாசாரத்தையும், விட்டுத் தங்கள் மனம் போனவழியும் அல்வழியிலுமெலாம் செல்லா நிற்கின்றார்கள். இது பற்றி யன்றோ நின்னாட்டிற் பஞ்சமெய்துவது" என்று சொன்னதாகப் புராணத்திற் சொல்லப்பட் டிருக்கிறது.

இத்தகைய காரணங்களும், உற்பாதங்களும் ஏற்புடையன வெனக் கொள்வோர்கொள்க. இனிப் பஞ்சத்தின் கொடுமைகளைப் பற்றிச் சற்று விசாரிப்பாம்:—பஞ்சமென்றாற் பசாஞத பிராணியில்லை. பஞ்சம்வந்து விட்டால், பச்சாத்தாபம், பிரியம், ஆசை, மனிதர்களுக் கியற்கையான வாஞ்சை யின்னு மிவைபோன்ற மாந்தரின் இயற்கைக் குணங்களெல்லா மிருந்த விடந்தெரியாமல் மறைந்து விடுகின்றன. இதனையே

"மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என நன்கு கூறியிருக்கின்றார். இதில் வருந்தும் சனங்களை நோக்குங்கால், கல்லுறு மனம் படைத்த கள்வரும் கண்ணீர் வடிப்பர். பஞ்சம்வந்துழி மிக்க நிலம் படைத்தவர்களிற் பெரும்பான்மையோர், நண்பரென்றும், குடிப்படைகளென்றும், வேறு கதியற்றுத் தம்மை யண்டிய மிடியர்களென்றுங் கருதாது தமது வயிற்றையே தெய்வமெனக்கருதிப் போஷிக்கத் தலைப்படுவார்கள். மேற்படியாரிற் சிலர் செவ்விய சிந்தையராய்த் தம்மை யண்டினோரை யாதரித்துப் புண்ணியம் கட்டிக்கொள்ளுவார்கள். இவ்வாறில்லாது செல்வமில்லா வேழையரும், அற்றைக் கூலியால் உயிரைக்காக்கு மிடியோரும், இளமையுந் தனமுமற்று மகனையே நம்பிய முதியோரும், கைப்பிடித்த கணவரே கதியெனக் கிடக்குங் காரிகைகளும், தங்கள் பசி தாங்காது எவ்வாற்றாலாயினும் வயிற்றை நிரப்பவேண்டுமென்று எண்ணங்கொண்ட வலியுறு தடியர்களுக்குக் கொள்ளைகொடுத்த அநாதையரும், தங்கள் தங்கள் விதியை நினைந்து நொந்து வருந்தி யாவையு மிறைவனது செயலெனத் தம்மை யடக்கித் தம்முயிரைக் காலனது கையில் ஒப்பித்து விடுகிறார்கள். சிலர் பிழைக்க வழியின்றித் தங்கள் வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களை விற்றும், வேறு சிலர் விதைக்கென்று வைத்திருக்கும் தானியங்களை யுபயோகித்தும் தினம் ஒருபோது வீதம் சாப்பிடுவார்கள். இதற்கும் வழியின்றித் திகைப்பவர் எண்ணிலர். நல்விளைச்சற் காலத்திற் கனவானென மதிக்கப்பட்ட ஒருவன் பஞ்சகாலத்திற் படுங் கஷ்டத்தைச் சொல்லொணாது.

அநேகர் பசிபால் மிக விளைத்துப்பசிபால் மிகவருந்துவார்கள். பாலகர்கள் ஒரு பக்கத்திற் பாலற்றுப் பதறுவார்கள். முதியவர்கள் ஒரு மூலையில்

மூர்ச்சையாய்க் கிடப்பார்கள். மகன் தந்தையிடம் சென்று "அப்பா! நான் பசியாற் சாகிறேனே! எனக்கு ஒருவாரமாக ஒரு கவளம் சாதங்கூடப் போடவில்லையே!!" என்று அழுவான். மகள் மாதாவிடம் சென்று "அம்ம! எனக்கேதாவது தின்னக்கொடு; எனக்குப் பசி பொறுக்க முடிய வில்லையே" யென்று கதறுவாள்!! ஐயோ! பாபம்!! எளியதந்தையர்கள் யாது செய்வார்கள்!!! "பெற்றவர்க்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை பெருப்பேதை யறிவாளோ" என்றபடி யவர்கள் படுந்துன்பத்தை யாதிசேடன்றன்னுயிரம் நாவாலும் சொல்லொணாது. இவ்வாறன்றி வருந்துங் குழவிகளுக் கிரங்கிச் சிலர் கொடுத்த பண்டங்களையும் ஈரமின்றி அவர்களினது கையினின்றும் திருகிப்பிடுங்கி யுண்பவர்கள் பலர். கருணையொடு கூடிய காரிகைகள் சிலர் தமக்குக் கிடைத்தனவற்றையும் இறக்கும் தம் மக்களுக்களிப்பார்கள். "கோடிப்பொன் கொடுத்தாலுங் குழவிகள்கிடைப்பதரிது" என்னும் உலக வழக்குப் பொய்க்கும்படி மிகுந்த குறைந்த விலைக்குந் தங்கள் குழவிகளையும் விற்பார்கள் அநேகர். நிலங்கள் சாவியாம் விட்டபடியால், தங்கள் ஆடு, மாடு, துணி, நகை நாணயம் இவைகள் யாவற்றையும் விற்றும் வாழ்நாட் கழிக்க முடியாமல் தவிப்பவர்கள் அநேகவாயிரவர். இதன் கொடியதுன்பங்களை யெல்லாம் பொறுக்க முடியாமல் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதலே தகுதியெனக் கருதி, விஷத்தினாலோ, ஆயுதங்களினாலோ, தூக்குப்போட்டுக் கொள்வதனாலோ, அல்லது, நதி, ஏரி, குட்டை, குளம், முதலானவைகளில் விழுந்தோ, அன்றிவரை பாய்ந்தோ, தங்கள் உயிரை மாய்த்துக்கொள்பவர் கணக்கிலர்; அந்தோ! என்ன கொடுமை!! எவ்வளவு பயங்கரமான காட்சி!!! இதேமாதிரியான வைகள் இப்பொழுது சமீபத்திலுண்டான பஞ்சத்திற் கணக்கில்லாமல் நடந்திருக்கின்றன. பஞ்சகாலங்களிற் சிசுவதை, தற்கொலை, முதலான தீச்செயல்கள் தலையெடுக்கின்றன. பிழைக்கும் வழியின்றாயின் எவ்வகைத் தீச்செயலையும் சற்றும் அஞ்சாமற்செய்ய யாவரும் தலைப்படுகின்றார்கள். பொய் சொல்லப்பின் வாங்குகிறார்களில்லை. இவ்வாறாகப் பஞ்சமென்னும் பாதகன் நாடுகளை நலிந்துதிரிகின்றான். ஆயினுந் தற்காலத்தில் நந்தேயத்தில் இராசாங்கமுறை பிறழாது செங்கோல் செலுத்தி நம்நாட்டை நாடெனக் கூறும் மதிப்பிழைத்த ஆங்கிலேய துரைத்தனத்தார் பஞ்சம்வராது அநேக வுபாயங்களைச் செய்துளர். அவற்றை மீறிவரினும் அவைகளைத் தடுக்கவும் உபாயம் படைத்துளர். அநேக கால்வாய்களைப் புதிதாகவெட்டி, முற்காலங்களிற் பயிரை யெங்குங் காணாதகளங்களைக் களித்துச்செழிக்கச் செய்கின்றார்கள். அன்றியும், பஞ்ச நிவாரணநிதியென மிக்க திரவியம் திரட்டிப் பஞ்சத்தால் விளையும் கொடுமையைத்தணிக்க ஆங்காங்குக் கஞ்சித் தொட்டிகளைக் கட்டுவித்தும், பஞ்ச நிவிர்த்தி வேலைகளை ஆரம்பித்தும், அங்கு வேலை செய்பவர்களுக்கு உணவும் உடையு மளித்தும் வரத்தகுந்த

வேற்பாடும் செய்துளர். இத்தகைய தர்மங்களைக் குறைவற நடத்தி வருவதற்காக வேற்படுத்தப் பட்ட உத்தியோகத்தர்கள் அடிக்குங் கொள்ளைக்கும் செய்யு மக்கிரமத்திற்கும் கேள்விமுறைகிடையா. நம்நாட்டுப் பஞ்சநிவர்த்திக்காகத் திரளான திரவியங்களாலும், ஏராளமான தானியங்களாலும் உதவிபுரியும் அமெரிக்காதேசத்தார் மாட்டும் ஐரோப்பியர் மாட்டும் நாமென்றும் நன்றி பாராட்டக்கடமைப் பட்டுள்ளோம். நம்நாட்டிலினிமேலாகப் பஞ்சமுண்டாகாதென்று ஒரு முடிவாய்ச் சொல்லக் கூடவில்லை. கொஞ்சக் காலத்திற்கு முன் காலஞ் சென்ற ஓர் ஐரோப்பியப் பெருமாட்டி, இந்தியாவின் பஞ்சநிவாரண நிதிக்கென்று ஆயிரம் பவுன் கொடுத்து, அவ்வகை நிதி தற்காலத்திலில்லாதிருந்தால் அவ்வாறு நிதி கூட்டத்தருணம் வரும் வரையிலும், இப்பணத்தை வட்டிக்கிட்டுக் காப்பாற்றி வரும்படி, லார்ட்மேயருக்கு அனுப்பி யிருப்பதாகப் பத்திரிகைகளிற் படித்தோம். கருணையங் கடவுளினருளால் நா மம்மாதை வாயாரப் புகழ்வோமாக.

இக்காலத்திற் பஞ்சத்தினிமித்தம் அநேக லக்ஷம் ரூபாயைச் செலவிட்டும், இன்னுமிக்கொடிய தீமைநம்நாட்டை விட்டு முற்றும் களைவதற் கான எத்துணைத்திரவியமும் செலவு செய்யச்சித்தராயிருப்பதாகவும் உறுதிமொழி கூறுகிறார்கள். இவ்வாறு நம்மிந்தியர்கள் வருந்துவதைப் பொறுக்க முடியாமல், தங்களாற்கூடிய உதவிபுரியும் ஆங்கிலேய வரசாட்சியை மேன்மேலும் பெருகச் செய்யுமாறு நம்மிறைவோனை நாம் இறைஞ்சிக் கேட்போமாக.

எம். வரதராஜ ஐயர்.

---

## LEARNING.
## கல்வி.

---

அருந்தமி ழவைக்க ணிருந்தருள் புரியும்
பெருந்தகை யாளர்காள் !

அறிவானும், ஆற்றலானும் மிக்கவர் குழுமிய இவ்வவையின்கண், அவ்விரண்டு மிலாப் புல்லறிவாளன் பேசத் துணிந்தது பெரிதும் பிழையே; ஆயினும்,

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநதப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில".

என்னும் நியாயத்தைக் கைக்கொண்டு ஒருவாற்றுற் றிடங் கொண்டனென். நிற்க.

ஈண்டெழுதுவான் புகுந்த விடயம் "கல்வி" என்பதே. அதனைப் பின்வரும் பத்துப் பிரிவான் விளக்குவாம். அவைதாம்.

(1) கல்வியின்ன தென்பதூஉம், கலைவல்லுநராவார் இவரென்பதூஉம்.

(2) கற்றற் குரிய நூல்கள் யா?

(3) கல்விப் பொருள், செல்வப் பொருள் என்னும் இரண்டிற் கல்விப் பொருளே சீருடைத் தென்பது.

(4) கல்விப் பயிற்சிக் கேற்ற காலம்.

(5) கல்வி கற்கும் முறை.

(6) கல்வி பயிலும் மாணுக்கர் கடனும், அவர் அநுசரிக்க வேண்டிய ஒழுக்க முறையும்.

(7) கல்விப் பயன்.

(8) கல்லாமை; அதனுன் வரும் இழுக்கு.

(9) கல்வியின் மாட்சிமை.

(10) கல்வி: தொகுத்துச் சுட்டல்.

**(1) கல்வி யின்னதென்பதூஉம், கலை வல்லுநராவார் இவர் என்பதூஉம்.**

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல்:

"உலவிய விஞ்சை வித்தை யூதியஞ் சால மோதி
கலையுட னுறுதி கேள்வி யிருநான்குங் கல்வி யின்பேர்"

என்னும் நிகண்டினுற் 'கல்வி' யென்னும் ஒரு பொருள் குறிக்கும் வேறு சொற்களை அறிகின்ருேம்.

கலைவல்லுந ராவார் விழுமிய நூல்களை விருப்புடன் கற்று, நீதி நெறி யினில் நிற்கும் பெரியோர். ஆகவே, ஒழுக்கங் கெடுக்கும் கொழிப்புள நூல்களைப் புறக் கணித்து, மற்றும், உண்மை அறிவினை ஊட்டவல்ல உயர் பெரு நூல்களி லூக்கம் வைத்துக் கற்பதே நந்தங் கடமை யாகும்.

"தரும நூலும் புராணத்தின் றன்மையுங்
கருதி யோர்ந்தவ ரேகலை வல்லரே"

எனக் கூர்ம புராணத்திற் கூறி யிருக்கின்றுர்.

(2) இனிக், கற்றற் குரிய நூல்கள் யா?

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறி விக்க வல்ல அரும் பெரு நூல்களும், நூலின் பொருளை நுகர்தற் கெளிதாம் படி நமக்குதவும் பான்மை வாய்ந்த நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமே கற்றற் குரிய நூல்களின் பாற்படும். அறமுதலாகிய பொருள் களைக் காணுதற்குக் கருவிபோற் கணித நூல்களும் இலக்கண நூல்களும் மனிதர்களுக்கு உதவலால் அவைகளைக் கண்களுக்குச் சமமென அறைந்துள் ளனர் ஒளவையாரும். அது தான் "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்"

என்பது. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென் பவாழு முயிர்க்கு" என்னுந் திருக்குறளையுங் காண்க.

(3) இனிச், செல்வப் பொருளினுங் கல்விப் பொருளே
சீருடைத் தென்பதைத் தெளிவுடன் விளக்குவாம்;

மனிதர்களாலே தேடற்பாலன வாகிய பொருள்கள் கல்விப்பொருள். செல்வப்பொருள் என இருவகையினவாம்: செல்வப்பொருள் கள்வர், வலியவர், அரசர், பங்காளிகள் என்னும் உயர்திணைப் பொருள்களாலும், வெள்ளம், அக்கினி என்னும் அஃறிணைப் பொருள்களாலும் கொள்ளை கொள்ளப் படுமன்றே! கல்வி அத்தன்மைத் தன்றென்பது யாவரு மறிந்ததே.

மேலும், செல்வப்பொருள் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே வரும்; கல்விப்பொருளோ பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகி, கொடுப்பானுக்குங் கொள்பவனுக்கும் ஏககாலத்தில் இன்பம் பயக்கும். "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு. காமுறுவர் கற்றறிந் தார்" மணற் சேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல் போலக் கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டேவரும். "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத். தூறு மறிவு."

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுணராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

என்ற நாலடியாரையும் நன்கு நோக்குக. என்னே! இதன் பெருமை! செல்வப்பொருளினைச் சம்பாதித்தலினும், காப்பாற்றுதலினும், இழத்தலினும் ஒருவன் எவ்வளவு இன்ன லடைந்து இடருறுகின்றனன். கல்விப் பொருளினை யடைந்தவனோ, நூல்களிற் பொதிந்துள்ள சொற்சுவை, பொருட்சுவைகளை அநுபவித்தலால் இம்மையில் மகிழ்ச்சியும், முத்தி நெறியினிற் செலுத்த வல்ல, முதன்மை நூல்களைக் கற்றறிந்ததனாற் பேரின்ப வாழ்க்கையும் பெறுதற் குரியவனாகின்றான். அறிவிலார்க்கு அறிவினைப் புகட்டுதலால் உலகத்தார் இக்கல்விமானிடத்தில் அளவிலா அன்பும் ஆர்வமுங் கொள்ளுவர். காணுதலாலே நல்லொழுக்கமும், மதுரமான வுறுதிச் சொற்களைக் கேட்கையால் இன்பமும் உண்டாதலாற் கற்றவரிடத்தே எல்லாரும் அன்புடையவராவர். இம்மட்டேயோ? கல்வியில் வல்ல கலைஞர்கள் அரசரினும் மேன்மை மிக்கவர், என்னணமெனிற், செல்லுமிடமெலாஞ் சிறப்புடன் விளங்குவார் கலை நலங் கண்ட கல்விமான்களே. இதனாலன்றோ,

" மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்றார் தமிழ் மூதாட்டியார்.

4. கல்விப் பயிற்சிக் கேற்ற காலம் :

எப்படி அழுக்குறாச் சீலையிற் சாயம் நன்றாய்ப் பற்றுமோ அப்படியே சிறுபிராயத்திற் கற்ற கல்வி புத்தியில் நன்றாய்ப் பதியும். அழுக்குப் படிந்த ஆடையிற் சாயம் செவ்விதிற் படியாத் தன்மைபோல, புத்தி சமுசாரத்தில் வீழ்ந்து வருத்தத்தை அடைந்து கொண்டிருக்கும் முதிர்ந்த பிராயத்திற் கற்றாலும் கல்வி நன்றாய்ப் பதியமாட்டாது. "இளமையிற் கல்" என்றார் ஔவை யாரும். மேலும், ஒவ்வொரு நாளிலும் காலையிற் படிப்பதே அதிக பயனை அளிப்பதாகும். முன் நாள் இரவிற் புடுத்துறங்கினதனால் மனம் கலக்க மற்று இருக்கின்றது. ஆகவே, காலையிற்படித்த பாடம் மனத்திற்றெளிவாய்ப் பதிகின்றது. கவலைக் கடலிற் கலங்கும் போழ்தாதல், அன்றி, வேறு விடயங்களில் மனம் அதிகமாய்ச் சென்றிருக்கும் போழ்தாதல், உடலுறு பிணியால் வருந்தும் போழ்தாதல் படிப்பது நலனைப் பயப்ப தில்லை ; எனவே, மனம் தெளிவாய், வேறு சஞ்சலத்தாற் பீடிக்கப்படா திருக்கும் போதே கல்வியைக் கற்கவேண்டும்.

5. கல்வி கற்கும் முறை :

கல்வியை நல்லாசிரிய ரிடத்துச் சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பெறாது நிற்றல் சந்தேகமாம். ஒன்றை மற்றொன்றாகக் கொண்டு துணிதல் விபரீதத்தின் பாற்படும். 'கற்க கசடறக் கற்பவை' என்றார் ஆசிரியர் திருவள்ளுவனார் வருந்திக் கற்ற நூலை மறக்க விடாது அதனைப் போற்றுதல் வேண்டும். அப்படிச் செய்யாது அதனைமறக்க விட்டு வேறு நூலைப் படிக்க விரும்புவான் புல்லறிவாளனே.

" வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என்றார் பிறரும். கல்வியிற் றேர்ச்சி யடைய விரும்பின் இடைவிடாது கற்றல் வேண்டும். 'கல்வி கரையில கற்பவர் நாட்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல' என இருத்தலாற் சில நூல்கள் மட்டும் படித்து எல்லாம் வல்ல நிபுணன் யானெனத் தோள்தட்டி வெளிப்படுதல் பேதைமையே.

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க"

என்றார் நீதிநெறிவிளக்கத்தும்.

தம்மினு மிக்க சான்றோரை அவமதியாது "கற்றதெல்லா மெற்றே யிவர்க்கு நாமென்று" பின்னுங் கற்கக்கடவர். கற்கு நூல்களைக் களிப்புடன் கற்க; வெறுப்புடன் கற்றால் வீணாய் முடியும். வெறுப்புடன் அங்ஙன் கற்போனுக்குக் 'குங்குமஞ் சுமந்த கழுதை'யே யுவமை. ஆசையுடன் கற்குங் கல்வியே இறுதியிற் பெரும்பயன் விளைப்பதாகும். ஆசானிடத்திற் பாடங் கேட்கும்போது மிக்க அமைவுடன் கேட்கவேண்டும்.

'செவி வாயாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்' தமைத்தல் வேண்டும்.

6. கல்விபயிலும் மாணாக்கர் கடனும், அவர்
அநுசரிக்க வேண்டிய ஒழுக்க முறையும்.

தாங்கேட்ட பாடங்களை நாடோறும் போற்றலும் தாம் படித்த நூல்களைப் பலதாமுஞ் சிந்தித்தலும் நல்லாசிரியனையடுத்து அவையிற்றைக் குறைவுதீரக் கேட்டலும், தாங்கேட்டறிந்ததைப் பிறருக்கு அறிவித்தலும், மாணாக்கர்தங் கடன்களாம்; கல்வியுடையவர், கற்றறிந்தாங்குப் புன்னெறி ஒரீஇ நன்னெறி தழீஇ, நன் மாணாக்கருக்கறிவுகொளுத்தி, யாவருக்கும் உறுதிமொழிகளைப் போதித்து, இம்மூன்று செயல்களையும் எஞ்ஞான்றும் தமக்குக் கடனாகக் கொள்ளல்வேண்டும்.

"நுண்மொழி நோக்கிப் பொருள்கொள லூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலு மிம்மூன்றுங்
கற்றறிந்தார் பூண்ட கடன்."

இவைகளனைத்திலும் அதிகமாய்க் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அஃது, கல்வியுடையவர் தாம் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதல் வேண்டும்.

"கற்றபின் நிற்க வதற்குத் தக" என்றார் தேவரும்.
"நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு,"

என நுவன்றருளினர் ஔவையாரும்.

பருகுவ னன்ன ஆர்வத்த னாகிப் பற்பல நூல்களைப் படித்தல்வேண்டும். கற்றாரோடு கலந்து பேசுதல் அளவிலாமகிழ்ச்சியும் ஆர்வமும் பயக்கும்.

"நுண்ணறிவி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும்"

என்ற நாலடியாரையுங் காண்க.

தான் மேன்மேலுங் கற்பதைத் தவிரத் தன்வழியி னுள்ளார்க்குந் தக்கவாறு கல்வியினைப் போதித்தல் வேண்டும்.

"எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றில்லை பிற" என்றார் பிறரும்.

ஆகவே, மக்கட்கு ஒருவன் செய்வதி லெல்லாம் அதிக சிறப்புடையது அவருக்குக் கல்வி போதித்தலே.

7. கல்விப்பயன்:

புத்தகங்களைப் படிப்பதனாலேயே புத்திக்கூர்மை யுண்டாகாது. உலக வழக்கும் உணருஞ் சிந்தையனாய் இயற்கைத் தன்மையை அறிதல் வேண்டும். படித்ததைப் பிறகு சிந்திக்க வேண்டும். எல்லாம் வல்ல எழில் கொளும் அறிஞரே அடக்கமென்னும் அருங் குணத்தவராவர். சிறிது படித்தவனே எல்லாங் கற்றுவிட்டேனென்று வாய்ப்பறை யறைந்து முழங்கிக் கொண்டு எக்கழுத்தத்தோடும் உலவித்திரிவான்.

ஒருவருக்குக் கல்வி கற்பித்தலை ஒருவிளக்கேற்றுதற்கு ஒப்பிடுவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரும். "ஒருவிளக்கேற்றுதல் அவ்வொரு விளக்கிலே பல விளக்கும், அப்பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணிலா விளக்கு ஏற்றப்படுதற்கேது வுண்டாமாறுபோல, ஒருவருக்குக் கல்விகற்பித்தல் அவ்வொருவரிடத்திலே பலரும், அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக எண்ணில்லாதவர் கல்வி கற்றுக்கொள்வதற்கு ஏதுவாகும்." அவர்கற்ற கல்வி தாம் பிறருக்கு அதனைப் போதித்த தன்மையால் அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புகளினும் சென்று சென்று உதவும். தாங்கற்ற கல்வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையுடன் கற்பியாதவர் காட்டிலே நச்சுமாமரமாவார். வித்தியாதானம் மிகவுஞ் சிறந்தது. கலைகற்றறியாத பேதையின் முகத்தை மயானத்துக் குவமை கூறுவார்.

'கற்றி லாய்கலை கற்றுண மார்முக
முற்று நோக்கின்ம யானத்தை யொக்குமால்.'

கல்வி தொடங்குங் காற்றுன்பந் தருவதாயிருந்து பின்பு இன்பம் பயக்கும். கல்வியாற் பயனடைய விரும்புகிறவர்கள் தாங்கற்றதைப் பிறருக்குச் சொல்லுந் திறத்தினையும் அடைய முயல வேண்டும்.

"சொல்வன்மை யின்றெனி னென்னாகு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து"

என்றார் குமரகுருபர சுவாமிகளும்

"இழிந்தவ னுயர்ந்த தொன்றை யியம்பினு முயர்ந்தோன் வாயின்
இழிந்ததொன் றறினு முள்ள வியல்பறிந் தோம்பி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாங் கூறும் புலப்படாப் பொருளுந் தெள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனங்கொளப் புகறல் வேண்டும்"

என்றருளினர் கச்சியப்ப முனிவரும்.

இருவிழிகளிருப்பினும் ஒளியின் உதவியின்றி நிலப்பொருள்களைக் காண்டலரிது. அதுபோலச் செல்வம் முதலிய இருப்பினும் நூற்கேள்வியில்லையேற் பாவபுண்ணியம், இம்மை, மறுமை ஆகிய இவைகளைப் பற்றிய உணர்ச்சியில் தெளிவு நிகழாது. இதனாலன்றோ.

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே"

என்றார் திருக்குற்றாலப் புராணமுடைய திரிகூட ராசப்ப கவிராயரும்,

கல்வியை விருத்தி செய்வதற்கு முக்கியத் துணையாய் இருப்பது கேள்வி, "அஃதாவது, கேட்கத்தகுநூலின் பொருளைகளைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்டல், கற்றவிடத்தே அதனாலாகிய அறிவை உறுதிப்படுத்தலாலும், கல்லாத விடத்தும் அதனை உண்டாக்கலாலும் கேள்வி மிகவும் இன்றியமையாத்துணை. ஒருவன் கல்லாதவனாயிருந்தும் கேள்வியுடையவனாயின் அக்கேள்வி அவனுக்குத் தளர்ச்சிவந்த விடத்துத் துணையாகும்.

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை" என்பதையுங் காண்க. 'கற்றலிற் கேட்டலே நன்று'

பிறருக்குத்தான் கற்றதைப் போதித்தலும், கற்ற கல்வியின் றுணையால் மேலும் கற்க முயன்று மெய்ஞ்ஞானத்தை அடைதலுமே, கல்வியின் றுணையால் நாம் செய்யவேண்டுவன.

"கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ?"

என்றருளினர் தந்நேரிலாதொளிருந் தாயுமானவ ரெனும் பெரியோர்.

8. கல்லாமை : அதனல் வரும் இழுக்கு.

'கல்லாமை' என்னும் விஷயமே ஒரு பெரிய வியாசத்தின்பாற் படுமே யாயினும், 'கல்வி' யென எடுத்தவிடத்து அதனெதிர் மறையாம் 'கல்லாமை' என்பதைப்பற்றி 'மற்றொன்று விரித்தல்' என்னுங் குற்றத்திற் காளாகாதபடி, சுருக்கமாகவே 'ஒன்றின முடித்தல் தன் இனம் முடித்தல்' என்னும் உத்தியால் ஈண்டு எழுதுதல்.

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று"

என்னும் பாடலாற் கல்லாதான் துயரம் மலையிலக்கன்றோ?

9. கல்வியின் மாட்சிமை:

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கை கொடுக்குங் கல்வி யினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

"கடைநிலத் தோராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்."

"தனக்குப் பாழ் கற்றறி வில்லா வுடம்பு"

என்ற ஆன்றோர் மொழியாற் கல்வியின் மாட்சிமை தானே பெறப்படும். கலைநல மெவற்றினுஞ் சிறுதற் பாலதே. கல்வியின் மாட்சிமை இம்மட்டேயோ?

ஒரு தாய் கற்றுள்ள மகனிடத்தில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கின்றாள்! தன் மகனைக் கற்றோ னெனக்கேட்ட தாய் பெற்ற பொழுதிற் பெரிதுவக்கும்

"பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

என்னும் புறநானூற்றின் செய்யுளே யான்மேற்கூறியதற்குத் தக்கசான்றாம்.

நம்மைப் படைத்த நான்முகத் தோனினும்
கல்வியின் நலத்தைக் கண்டவர் பெரியவ ரெனின்

என்னே இதன் மாட்சிமை!

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்றருளினர் குமரகுரு பரசுவாமிகளும். இதனை மனங்கொண்டோ அவன் நான்முகத்தோ னனதூஉம்! ஈண்டு இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர் கூறினது யாவருங் கவனிக்கத்தக்கது. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர்,

'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு' என்னுந்

திருக்குறள் வெண்பாவினுட் கல்வியின் மேன்மையும், அதனைக் கற்றோர்க் குண்டாகும் பயனும் இவையென அருளிச்செய்தார். எங்ஙனமெனின் ஒருவன் சாந்துணையுங் கல்வியைக்கற்கக் கடவனென்பதூம், அங்ஙனங் கற்றவனுக்கு எந்த நாடும், எந்த ஊரும், தன்னாடும், தன்னூருமா மென்பதுமாம். இல்வாழ்க்கை, புகழ், வாய்மை முதலியவற்றை ஒவ்வோரதிகாரத்து ளடக்கிக் கூறிவந்த நாயனர் கல்வியைக் கூறுமிடத்து அதனைக் கல்விமென்னும் ஓரதிகாரத்துள் அடக்கிப் புலப்படக் கூறுவதற்கு இயலாமல் ஒவ்வொரு விஷயத்தை ஒவ்வோரதிகாரத்துள் அடக்கிப் புலப்படக் கூறுகின்றோமென்று தாங்கொண்ட கொள்கையும் பிறழ்ந்து எதிர்மறையாகக் "கல்லாமை" யென்று வேறோரதிகாரம் வகுத்துக்கொண்டு அதன் சிறப்பைக் கூறவேண்டியிருத்தலாற் கல்வி எவ்வளவு மேன்மையுள்ளதென்று நாம் மதிக்கவேண்டும்!

செல்வ மளிக்குஞ் சிறப்புடைத் தெப்பொருள் ?
கண்போ லுதவுங் கவினுடைத் தெப்பொருள் ?
மெய்ப்பொருள் விளக்கும் மேன்மைய தெப்பொருள் ?
மெலிவிற் கோர்துணை மேவுவ தெப்பொருள் ?
புகழினைக் கொடுக்கும் பொற்புடைத் தெப்பொருள் ?
'கல்வி' யெனப்படுங் காண்டகு பொருளே.

## (10) கல்வி—தொகுத்துச் சுட்டல்

பலவற்றையுந் திரட்டிக் காட்டுதலே தொகுத்துச் சுட்டல். கல்வியின் மாட்சிமை பயன் முதலியனவற்றை சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னல் ஒருகாலும் இயலாது. அங்ஙனமிருக்க, தொகுத்துச் சுட்டல் என்று ஒரு பிரிவு என் எடுத்துக் கொண்டதென்றால்— என்னல் எழுத இயலாவிடினும், அறிவான் மிக்கவர் அருமையாக வரைந்

கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் மகா வித்துவானுமாகிய பிரமஸ்ரீ, உ. வே. சாமிநாதையரவர்களாற் பார்வையிடப்பட்ட இந்நூலை யியற்றினூர் ம-௱-௱-ஸ்ரீ ஐ. சாமிநாத முதலியாரவர்கள். இவர் சி. தியாகரா ஜச் செட்டியாரவர்கள்பாற் கல்வி பயின்றவர்களுளொருவர். இந்நூல் சிறப் புப்பாயிரம், ஆக்கியோன் வேண்டுகோள், சாவித்திரி சரித்திரச் சுருக்கம் ஆகியவிவற்றை முன்னுறுப்புக்களாகப் பெற்றுளது; பாயிரமுட்பட 228 வெண்பாக்கள் கொண்டது; விழுமிய பொருள் பயப்பது. சாவித்திரி சரித்திரக் கதையைக் கேட்டுளோர் யாவரும் செய்யுளாகச் செய்யப்பட்டுள இந்நூலின் இன்றியமையாமை காண்பர். கற்புடைமையின் மேம்பாட்டை விளக்குவதற்கு இந்தச் சாவித்திரி சரிதத்தினுஞ் சிறந்தது வேறொன்று மின்று. இத்தகைய பெருமைவாய்ந்த இதனைச் செய்யுளாக யாத்தமை மிகவும் நேரிதே. இங்ஙனம் இவ்வளவுதூரஞ் செய்த நம்முடைய முதலி யாரவர்கள் இந்நூலை நளவெண்பாவைப் போலக் காண்டங்களாகப் பகுத்து அச்சிட்டிருந்தால் இதன்கட் பயிலப்புகும் இளைஞர்கட்குப் பேருதவியா யிருந்திருக்கும். இனி, இந்நூலின்கணுள்ள பாடல்களெல்லாம் இனிய வோசையுடையனவாய்ப் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் இன்பம் பயப் பனவாயிருக்கின்றன. நூலினிடையிடையே பற்பல நீதிகளுங் காட்டப் பட்டுள. பல்வகைய அணி நலங்களுஞ் சிறந்து காணப்படுகின்றன. இந்நூல் பிரவேச பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கத்தகுந்த தொன்றும்; பிரவேச பரீக்ஷை வகுப்பிற்குக் கீழ் வகுப்புக்களிலிருந்து கல்வியறிவிற் றேறும் இளஞ்சிறுர்க்குந் தக்கதோர் பாடமாயிருந்து பயன்படக்கூடியது. இது மகளிர்க்கு எவ்வாற்றானுமேற்றதென்பது சொல்லாமலே விளங்கும்.

**மரகதவல்லி :**

[இது மினெர்வா அச்சியந்திர சாலையிற் பதிப்பித்தது. இதன் விலை அணா 5. தபாற்கூலிவேறு.]

இத்தமிழ்க் கதையை இயற்றினூர் ம-௱-௱-ஸ்ரீ, பி. சி. கோவிந்தசாமி ராஜாவவர்கள். இஃது ஒருவாறு நல்ல நடையிலேயே யெழுதப் பெற்றுள தெனினும் ஆங்காங்குச் சில பிழைகள் காணப்படுகின்றன. இனிக்கதை சம்பந்தமாக, சுந்தரம்பிள்ளை தாசில்தாராயிருக்கும்போது பாராட்டிய கௌரவமுங் கர்வமும் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டுள. மரகதவல் லியின் மாறுபட்ட வுணர்ச்சியைத் தெய்வசிகாமணிப் பிள்ளை நல்வழியிற் கொணர்ந்த விதம் மெய்ச்சத்தகுந்ததே. உயர்ந்த பதவி நம் இராசாங்கத் தாரிடஞ் சதமன்று என்பதும் பின்னர் நேரிடக் கடவனவற்றைக் கருதாமல் ஒழுகுவோர் துன்பமெய்துவர் என்பதுந் தெளிவாய்த் தெரிக்கப்பட்டுள. மரகதவல்லியினுள்ளம் திரிந்தது படிப்பினாலென்பது நூலாசிரியர் கருத்து. இவர் பெண்கல்வியைப் பற்றி மாறுபட்ட கொள்கையுடையாரென்று துணி ந்து கூறுதற் கிடனுண்டு. மரகதவல்லியின் குணத்தைப் படிப்பிலாச் சில பெண்களின் குணத்துடன் மாறாக ஒப்பிடுகின்றனர். பெண்களைப் புருடர்க் குச் சமானராக்குதல் நேரிதன்றென்பது இவர் துணிபுபோலும். இவர் வைத்தியநூற் கல்வியின் மேம்பாட்டை யுள்ளவாறே யுயர்த்திக் கூறுதல் விரும்புதற்பாலதே. "அவள் கத்தரிப் பழம்போன்ற நிறத்தினள்" "சான் றவர் மனம்போல வெறுமையாயிருந்தன" என்றற் றொடக்கத்த உவமைகள் அசம்பாவிதமாகவும் சொற்பொருளுணரா துரைத்தனவாகவும் விளங்குகின்

றன. மனவெழுச்சி தானாகவே படித்தது முண்டாகத் தக்கவாறு உவமை கூறவேண்டும். மனவெழுச்சி தாராத வுவமைகள் கூறியென்ன பயன்? எனினும் இக்கதை இக்காலத்தில் வெளியாகி யிருக்குஞ் சில விநோத கதைகளிலும் மேம்பட்டதென்று கூறலாம்.

## திருவிடையூர்த் தலபுராணம் :

[இது கூடலூர்த் தேசாபிமானி அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை: அணா-12. தபாற்கூலிவேறு.]

மேலைச்சேலூரென்று வழங்குந் திருவிடையூரின் தலபுராணம் இரண்டு காண்டங்களை யுடைத்து. அவற்றுள், முதற்காண்டம் இரட்டணைப் பெருமாளையரவர்கள் குமாரியார் அசலாம்பிகை யம்மையவர்களியற்றியது; இரண்டாங்காண்டம் குழந்தை வேலுப்பிள்ளை யென்பா ரொருவரியற்றியது. முதற் காண்டத்தில் 545-செய்யுட்களும், இரண்டாங் காண்டத்தில் 410 செய்யுட்களு முள்ளன. ஒரு புராணத்தின் சிறப்பு அந்நூற் பாயிரப்படலத்தினானும், நாடுநகரப்படலங்களானும் விளங்கும். இவைகொண்டு இப்புராணத்தை யாராயப் புக்குழி இது மிகவும் மேதகவுடைத்தாக விளங்காநின்றது. இதன்கட் பலகற்பனைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. பெண்டிர் சிறப்பும் பெண்கல்விச்சிறப்பும் விசேடமாக இந்நூலின்கட் கூறப்பட்டுள. நாட்டுப்படலத்தின் நான்காஞ் செய்யுளாகிய "ஆடமைப் பசுந்தோளிய ராய்ந்தகேள் வியினும், பாட மைந்தில மெனும்பெரு நாணுளம் பற்றி, நாடியங்கவரினமென நானில மகளைச், சேடனும்பரி வோடிவண் சென்னியேந் துவதே" என்பது நங்கூற்றினை வலியுறுத்துமாறு காண்க. தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள் வைப்பு முதலிய பற்பலவணி நலங்களும் ஆங்காங்குப் பொதிந்து கிடக்கின்றன. "ஓதுமொழி லுங்குலமு முண்டியொடும் வேறாய்ப், பேதமுறு பைங்கிளியு மிங்கிவர் பயிற்றுங், காதலுரை கற்றிவர் கருத்திசைவ தென்னின், மாதரினை யோர்மனம் வணக்கலரிதேயோ?" என்ற செய்யுட் பொருட்பேறணி கொண்டபாடலும், "பொங்கொளி நுதல்சசி யினைத்துணை பொருந்தும், பங்கய மணிப்பரும வல்குல் பணி கூவு, மங்கலுமு மேனிநிழன் மஞ்ஞையை யழைக்கும், மங்கையர் வயிற் கலக மின்றிவர வற்றோ?" என்ற வேற்றுப்பொருள் வைப்பணிகொண்ட பாடலும், இவைபோல்வன பிறவும் மிகவும் பாராட்டற்பாலன. இரண்டாங் காண்டத்தினும் முதற் காண்டமே மிக்க சிறப்புடைத்தென்பது இந்நூலினைப் படிக்குநர்யாவருக்கும் தெற்றென விளங்கும். எனினும், இரண்டாங்காண்டமுஞ் சிறவாமற் போகவில்லை. முதற்காண்டம் முதலாவது தான். இரண்டாங் காண்டம் இரண்டாவது தான். இனி நூலினேற்றங் கண்டுழி, ஆடவர் மகளிரென்ற வேறுபாடு கருதாமல் நூலாசிரியர்களைக் கௌரவப் படுத்துதல் வேண்டும். திருவிடையூர்த் தலபுராணமென்னு மிந்நூல் பண்டிதர் பாராட்டத் தகுவதென்பது சொல்லாமலே விளங்கும். இந்நூலின்கட் சில பகுதிகள் நமது சென்னைச் சர்வகலாசாலைப் பிரதமகலா பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கத்தகுந்தன. அங்ஙனம் வைத்தல் பெண் கல்வியைப் பெரிதும் வளர்ப்பதாகும்.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**மக்களை வருத்திய தோர்மான் :**—ஜப்பல்பூரிற் பாடசாலைப் பரிசோதகராகிய **ஷார்ப்பு** துரையவர்கள் ஒரு கலைமான் வளர்த்துவந்தார். அஃது ஒருநாள் தன்னிருப்பிடம் விட்டு வெளியேறிப் போய்விட்டது. அங்ஙனம்போன அக்கலைமான் தன்னைப் பிடிக்க வந்தவர்களையெல்லாம் வெருட்டத்தொடங்கிற்று. அவ்வாறே தன்னைப் பிடிக்கவந்த சுதேசக் காவற்காரனொருவனைத் தன் கொம்பினாற் குத்தி அது காயப்படுத்திற்று. அதன் மேல் அவ்வூர்க்கலாசாலைத் தலைவராகிய **பிரௌனிங்** துரையும் லே என்ற மற்றொரு துரையுமாக இருவரும் வெளியே வந்து இதனை எதிர்த்தவளவில் இஃது அவர்களையும் முட்டிக் காயப்படுத்திற்று. இக்காலத்திற் சிலர் சுதேசி என்றும் வெள்ளைக்காரரென்றும் வேறுபாடு கருதி நடந்த போதிலும் மிருகங்களும் அன்னாரிஷ்டப்படி வேறுபட்டு நடவா என்பது திண்ணம். குத்துண்ட காவற்காரனிறந்தான். துரைமார்கள் சௌக்கியமடைந்து வருகின்றனர். இவ்வாறு மக்களை வருத்திய அக்கலைமான் இறுதியிற் சுட்டுக்கொல்லப்பெற்றது. எவ்வளவு அருமையாகப் போற்றிவைக்கப்பட்ட பொருளும் பிறர்க்கு இடுக்கண் விளைப்பதாயின் அஃதொழிதல் இன்றியமையாததே.

**திருடன் கையிற் சிக்கிய காவல்வீரன்:**—சிங்கப்பூரில் ஒருநாள் ஒரு திருடன் இரண்டு காஸ்மீரச்சால்வைகளைத் திருடிக்கொண்டு வெளிவருகையில் ஒரு காவல் வீரன் எதிர்ப்பட்டான். அவனைக்கண்ட வளவில் திருடன் நடுங்கிக் கையிலுள்ள சால்வைகளைக் கீழே எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான். அவ்வளவிற் காவல்வீரன் சிறிது தைரியங்கொண்டு அத்திருடனைப் பின்றொடர்ந்தோடிப்பிடிக்க முயன்றனன். அதுகண்ட திருடன் இனித்தப்பலியலாதென்றுணர்ந்து பின்பற்றி வந்தகாவல் வீரன்மேற்பாய்ந்து அவனைப் பிடித்து யாட்டுக்குட்டிபோலத் தன்தோளின்மேற் போட்டுக்கொண்டு கதுமெனச்செல்லத் தொடங்கினன். இங்ஙனம் திருடன் கையிற் சிக்கிய காவல் வீரனோ தன்னைச் சிறைவீடு செய்து கொள்ள எவ்வளவோ முயன்று பார்த்தும் முடியாமற் போயிற்று. இறுதியிற் காவல்வீரன் தன் கையிலுள்ள போலி வெள்ளிக்குழலை யூதுதலும் வேறொரு காவல் வீரன் போந்தனன். அதன்மே லிருவருங்கூடி அத்திருடனைப்பற்றிச் சிறையிலிட்டனர். என்னே காவல்வீரர்களின் வன்மை? இக்காலத்தில் தேகவன்மையில்லாது சோற்றுக்கு வீங்கிகளாய்த் திரிபவரெல்லாம் காவல் வீரராவதென்றால், அவர்கள் மேற்கூறியவாறு திருடர் கையிற் சிக்கி விழியாமலென் செய்வர் ?

**தஞ்சைச் சௌந்தரத்தம்மா :**—தஞ்சைமாநகரில் ஒரு குழந்தையைக் கொன்றதன் நிமித்தம் நியாயாதிபதியால் தீபாந்திர சிட்சை விதிக்கப்பெற்ற பிராமணச் சிறுமியாகிய **சௌந்தரத்தம்மாவின்** விஷயமாய்ப் பல்லோரும் அநுதாபங்கொண்டு அனுப்பியமனுவிற்கு நமது சென்னைத்தேசாதிபதியவர்களாகிய **ஆம்ட் ஹில் சீமானவர்கள்** தாம் மன்னிக்கவியலாதென்று விடையளித்துவிட்டனர். அவ்வம்மையும் மரக்கலமேறி அண்டமான் தீவையடைந்தாள். என்னே அப்பெண்ணின் கதி! நீதிவிஷயங்களிற் சாதிவேற்றுமை கருதி நடத்தலுமுண்டுகொல் ? மட்கலத்திலுள்ள கடு பொற்கலமுற்றால் தன் தீமை திரியுமோ? ஒருகுலத்திற் கொருநீதி யாவரே வகுப்பார் ?

**சென்னைச் சட்டநிருபண சபை** :—இதற்குக் கனம்பொருந்திய வில்லியம் மில்லர் துரையவர்களே மீட்டும் நமது சென்னைச் சர்வகலாசாலைப் பிரதிநிதி யவயவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டன ரென்பது கேள்வியுற்றுக் களிபேருவகைபூக்கின்றும். இந்நாட்டுச் சமீந்தாரர்களின் பிரதிநிதியவயவியாகப் பொப்பிலி மகாராசா அவர்களே மீட்டும் நியமிக்கப்பட்டுளராம்.

**ஆங்கிலக் காட்சிச்சாலை** :—சீமையிற் 'பிரிட்டிஷ் மியூசியம்' என்னும் ஆங்கிலக்காட்சிச் சாலையில் வர்த்தமானப் பத்திரிகைகளைச் சேமித்து வைப்பதற்கு இடம் போதவில்லையாம். ஆதலின் அதுபற்றி மூன்று செய்நிலம் வாங்கி ஹேண்டன் என்னுமிடத்திற் பெரியதோர் கட்டிடங் கட்டப்போகின்றனராம். அந்த விடத்திற்கும் கட்டிடத்திற்கும் செலவு 18,000-பவுன் பிடிக்குமாம். இக்கட்டிடமும் கணக்குப் பார்த்துழி இன்னுமொரு நூற்றுண்டளவு வெளிப்படும் பத்திரிகைக் கட்டுக்கள் மட்டில் வைப்பதற்குப் பேதிய இடமுள்ளதாயிருக்குமே யன்றி அதற்குமேலிராதாம். இப்பொழுதிருக்கும் பத்திரிகைகளின் தொகுதிகளே பெரியதோர் புத்தக சாலையாய் விட்டதாம். இதன் கண்ணே ஆங்கில ராஜ்யத்தின் பல பாதங்களினும் அச்சிடப்பெற்று வெளிப்படும் பத்திரிகைகளெல்லாம் சேர்ந்திருக்கின்றனவாம்.

**மணவினைச் செலவுக்குப் பயந்த மக்கள்** :—வங்காளத்து வைணவர்கள் விசேடமாய் வருணபேதம் பாராட்டுகிறதில்லையாம். ஏனைய உயர்ந்த சாதிகளினின்றும் பல்லோர் பிரிந்து மேற்கூறிய பிரிவு சாதியாரொடு வந்து சேர்ந்துவிட்டனராம். இதற்கு இன்னதுதான் காரணமென்று தெளியாது பல்லோரும் பலவிதமாய்க் கூறுகின்றனர். அவற்றுள் ஒன்றுபின்வருவதாம். வங்காளத்துள்ள உயர்ந்த சாதியாருள் மணவினை சம்பந்தமாய் இக்காலத்திலேற்பட்டிருக்கும் கஷ்டங்களும் பணச்செலவும் மிகுதியாதலானும் அவ்வாறன்றி வைணவசாதியில் அவ்விரண்டும் மிகவுங் கொஞ்சமாமாதலானும் மேற்கூறியவாறு சாதிவிட்டுச் சாதிமக்கள் புகுவாராயினர். அந்தோ! இவையனைத்தையும் உய்த்துணர்ந்து நம்மவராயினர் தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு தமக்கும் தம்மக்கட்கும் இடுக்கண் விளையாதவாறு நடத்தலென்று கொலோ? நாகரிக நிலை முதிர்ந்த இற்றைஞான்றினும், பண வருமையறிந்த இற்றை ஞான்றினும், கல்வி யறிவு மிக்க இற்றைனைச் பொருண்முறை நூலுணர்ச்சி சான்ற இற்றைஞான்றினும், மணவிஞான்றினும், செலவுமட்டுப் பட்டிலதெனின் என்செயற்பாலெமோ? இதுவுங் காலக்கொடுமையே யன்றோ?

**தபால் விளம்பரம்** :—1902ஞு ஏப்பிரல்மீ 1உயிலும் அதற்குப் பின்தேதிகளிலும் 5 ரூபாய்க்கு மேற்படாமற் செய்யப்படும் (உள் நாட்டு) மணியார்டர்களுக்கு, கமிஷன் 2-அணுவிற்குப் பதிலாக, ஓர் அணு வாங்கப்படும். 5-ரூபாய்க்கு மேற்பட்டிருக்கிற தொகைகளடங்கிய மணியார்டர்களுக்கு இப்பொழுது வழக்கப்பிரகாரம் வாங்கப்படுகிற தொகைதான்.

மேற்கூறிய அல்லது அதற்குப் பிந்திய தேதிகள்முதல் 5-ரூபாய்க்கு மேற்படாமற் குறிக்கப்பட்டிருக்கிற தொகையையுடைய வாலியுபேயபில் உருப்படிகளின் சார்ஜ் 2-அணுவுக்குப் பதிலாக ஓர் அணுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வசூல்செய்யப்படும் தொகை 5-ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் வழக்கப் பிரகாரம் இப்பொழுது வாங்கப்படுகிற பிரகாரம் சார்ஜ்செய்யப்படும்.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY THOMPSON & CO.,

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.




No. 302—Rs. 2-0-0.



No. 306—Rs. 3-0-0.




Rs. 3-0-0.

ஒவ்வொரு டைரியிலும் நமது சக்கரவர்த்தியினுடைய உருவப் படம் மிக நேர்த்தியாய் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

தாம்ஸன் அண்டு கம்பெனியார்

# மினெர்வா டைரிகள்.

நடந்துவரும் 1902வருஷத்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய டைரிகள் விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன.

நெ. 1. ஆறுவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3 அங்குல அகலமும் $4\frac{1}{4}$ அங்குல நீளமும் உள்ளது. 0 4 0

2. ஷை ஷை மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான பாக்கெட் டைரி 0 6 0

3. அதிக உபயோகமுள்ளதும் அவசியமான விஷயங்களடங்கியதும் 8 - அங்குல நீளமும் 5 - அங்குல அகலமும் உள்ளது. 0 12 0

3. ஷை பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது 1 0 0

4. அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10 - அங்குல நீளமும் 8 - அங்குல அகலமுமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 2 0

5. பூல்ஸ்காப் சைஸ் அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 4 0

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, துலுக்கு, மலையாளம், கன்னடம் இந்த ஆறுவித பாஷைகளில் தேதிகள் அச்சிட்டிருப்பதோடும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் பஞ்சாங்கம், 12-மாதத்து ராசி சக்கரம், அமிர்தயோகம் யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணிதல், ஆருடத்திற்கு, ஆர்சைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமை யறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், கரிநாள், காது குத்தும் நாள், கிருகப்பிரவேசம், கோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தம்பல், தேதிமழை, நிஷேக முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், கௌரி பஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரை வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டுவோர் அடியிற்கண்டவிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

தாம்ஸன் கம்பெனி,
33, பிராட்வே, சென்னை.

PRINTED AT THE "MINERVA" PRESS, BROADWAY, MADRAS.